இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - AUGUST 2026
VOL. 24 ISSUE 5 - 28 PAGES - Rs.13/-

ஆகஸ்ட் 2026

உன் தேவனாகிய கர்த்தர்
உன் சிறையிருப்பைத் திருப்பி,
உனக்கு இரங்குவார்
(உபாகமம் 30:3)

பெதஸ்தாவில் அற்புதங்களின் நாள்

2026 ஜூலை 11 (சனி) அன்று கோயம்புத்தூரிலுள்ள பெதஸ்தா ஜெப மையத்தில் ஆசீர்வாத கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இந்தியா முழுவதிலுமிருந்து 6,000க்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர். விசுவாசமும் ஆராதனையும் ஜெபங்களும் அந்த இடத்தை நிரப்பின; மக்கள் தேவ சமுகத்தையும் அற்புதங்களை நடப்பிக்கும் அவரது வல்லமையையும் அனுபவித்தனர்.

யோவான் 11:40 வசனத்தின் அடிப்படையில் சாமுவேல் தினகரன், அனைவரும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்து அவரது மகிமையைக் காணவேண்டும் என்று உற்சாகப்படுத்தினார். ஜெபங்களுக்கு கிடைத்த பதில்களையும், அற்புத இடைப்படுதல்களையும் வல்லமையான சாட்சிகளாக அநேகர் பகிர்ந்துகொண்டபோது பலர் திடப்பட்டனர்; கூடாதவற்றையும் தேவனால் செய்ய முடியும் என்று நம்பும்படி ஊக்கம்பெற்றனர். ஜெப எண்ணெயை பயன்படுத்துகிறவர்கள் அனைவரும் ஆண்டவருடைய சுகத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று ஊழியர்கள் இணைந்து ஜெபித்தனர்.

அன்று, வாலிபர் ஆசீர்வாத திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இது, 22 முதல் 35 வயது வரையிலான இளைஞர் மற்றும் வாலிபருக்காக ஜெபிக்கிற முயற்சியாகும். அடுத்த தலைமுறையின் ஆவிக்குரிய வளர்ச்சி, உயர் கல்வி, வேலை, பொருளாதாரம், திருமணம், குடும்ப வாழ்க்கை, எதிர்காலம் இவற்றுக்காக ஒருமனதாக ஜெபித்து, பெலப்படுத்தும்படி இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து Dr. பால் தினகரன், ஆதியாகமம் 12:2,3 என்ற பகுதியிலிருந்து, தம் ஜனங்களை ஆசீர்வதிப்பதிலும், அவர்களை தம் ஆசீர்வாதத்தை பிறருக்கு கொண்டு செல்கிறவர்களாகவும் மாற்றுவதற்கும் தேவன் பிரியமாயிருக்கிறார் என்று செய்தியளித்தார். பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டபடி அவர் தீர்க்கதரிசனமாக, மக்களை பெயர் கூறி அழைத்து, அவர்கள் தேவைகளை வெளிப்படுத்தி, சுகத்திற்காகவும், விடுதலைக்காகவும், சீர்ப்படுத்துதலுக்காகவும், தெய்வீக இடைப்படுதலுக்காகவும் ஜெபித்தார்.

கர்த்தர் வல்லமையாக அசைவாடினார். அநேகர் அவரது இயற்கைக்கு அப்பாற்பட்ட தொடுதலை உணர்ந்ததாக சாட்சியளித்தனர். நாள்பட்ட வியாதிகள் முற்றிலுமாக மறைந்தன. நெடுங்கால போராட்டத்திற்கு பிறகு விடுதலை கிடைத்து, ஒரு பெண் குழந்தையை தேவன் ஈவாக அருளினார் என்று ஒரு தம்பதியர் மகிழ்ச்சியுடன் சாட்சி கூறினர். நடக்க இயலாத ஒருவர் தெய்வீக பலன் பெற்று சிரமமில்லாமல் நடந்து சென்றார்.

Dr. பால் தினகரனும், சாமுவேல் தினகரனும் வந்திருந்த ஒவ்வொருவருக்காகவும் தனித்தனியே ஜெபித்து அவர்கள்மேலும் அவர்கள் குடும்பத்தின்மேலும் ஆசீர்வாதங்களை உரைத்தனர். கூட்டம் நிறைவுற்றது. மக்கள், புதுப்பிக்கப்பட்ட விசுவாசத்தோடும், ஆண்டவர் இன்னும் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் கேட்டு அற்புதங்களைச் செய்கிறார்; வாழ்க்கையை மாற்றுகிறார் என்பதை அறிந்து களிகூருதலோடும் திரும்பினர்.

ஞாயிறுதோறும் ஜெப கோபுரங்களில்... அற்புதங்களோடு ஆராதனை

2026 ஜூன் 28 அன்று சென்னை Dr. டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரத்தில் நடந்த ஞாயிறு ஆசீர்வாத கூட்டத்தில் ஏறக் குறைய 1,500 பேர் கலந்து கொண்டனர். ஊழியத்தின் வாயிலாக தேவன் செய்த அற்புதங்களைக் குறித்த சாட்சிகளைக் கேட்டவர்கள் அதிகமாய் உற்சாகமடைந்தனர். கேட்லினின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. இந்தச் சிறிய வயதிலேயே தேவன் தம் மகிமையின் பாத்திரமாக மகளை எழுப்பி வருவதற்காக அனைவரும் அவரை ஸ்தோத்திரித் தனர். உபாகமம் 31:8 என்ற வசனத்தின் அடிப்படையில் செய்தியை பகிர்ந்துகொண்ட Dr. பால் தினகரன், கர்த்தர் தம் பிள்ளைகளுக்கு முன் செல்கிறார்; வழியை ஆயத்தம்பண்ணுகிறார்; கூடாதவற்றை கூடச் செய்து சாட்சியாக மாற்றுகிறார் என்று நிச்சயத்துடன் கூறினார். ஜெபவேளையில், பரிசுத்த ஆவியானவர் Dr. பால் தினகரனை வழிநடத்தியபடி தீர்க்கதரிசனமாக பெயர்களை அழைத்து, பிரச்னைகளை சொல்லி துல்லியமாக ஜெபித்ததோடு, வந்திருந்த அனைவருக்காகவும் நெடுநேரம் செலவழித்து தனித்தனியாக ஜெபித்தார். வாழ்க்கை தொடப்பட்டன; விடாய்த்த பல உள்ளங்கள் பெலப்படுத்தப்பட்டன; தேவன் மகிமைப்படுத்தப்பட்டார்.

அண்ணா நகர் ஜெப கோபுரத்தின் 12வது ஆண்டுவிழாவை நினைவுகூரும் வண்ணம் 2026 ஜூலை 5ம் தேதி ஞாயிறு ஆசீர்வாத கூட்டம் அண்ணாநகரில் உள்ள ECI கிறிஸ்து ஆலயத்தில் நடைபெற்றது. தேவனுடைய உண்மையிலும் கிருபையிலும் களிகூரும்படி மக்கள் திரண்டு வந்தனர். ஜெப கோபுர ஊழியத்தின் வாயிலாக பதில் கிடைத்த விண்ணப்பங்களின் சாட்சி வந்திருந்தோருக்கு தைரியம் அளித்தது. 2 சாமுவேல் 7:9 வசனத்தின்படி பிரசங்கித்த சாமுவேல் தினகரன், கர்த்தர் குடும்பங்களைச் சீர்ப்படுத்துகிறார், இழந்த ஆசீர்வாதங்களை புதுப்பிக்கிறார், எதிர்கால தலைமுறைகளை ஆசீர்வதிக்கிறார்; தம் மக்களின் பெயர்களை பெரிதாக்குகிறார் என்று உறுதியுடன் கூறி, ஒவ்வொருவரையும் உற்சாகப்படுத்தினார். ஜெப வேளையில் அவர் அதிகாரத்துடன் ஜெபித்ததுடன், உடல்நல கோளாறுகளுக்குக் காரணமான அந்தகாரத்தின் வல்லமைகளையும் கடிந்துகொண்டார். ஒவ்வொரு குடும்பமும் சுகத்தையும் விடுதலையையும் தேவ பிரசன்னத்தையும் பெற்றுக் கொள்ளும்படி ஜெபித்தார். பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக அசைவாடினார். ஆண்டவரின் சமுகத்தால் தொடப்பட்டு அநேகர் கண்ணீர் வடித்தனர். தேவனை தனிப்பட்டவிதத்தில் அனுபவித்து, விசுவாசத்தில் பெலப்படுத்தப்பட்டு, தேவனுக்கு மகிமை செலுத்தியபடி மக்கள் வீடு திரும்பினர்.

சென்னை அண்ணா நகர் ஜெப கோபுரத்தில்...

தேற்றும் மேய்ப்பர்

அன்பானவர்களே, இம்மாதத்தில் ஆண்டவர், ''உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற உன்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார்'' (உபாகமம் 30:3) என்ற வாக்குத்தத்தத்தைத் தருகிறார்.

இந்த நிச்சயம் எவ்வளவு ஆறுதல் அளிக்கிறது! நம் தேவன், உங்கள் வாழ்வில் சிதறுண்டவை அனைத்தையும் சேர்க்கிறார்; உடைந்தவை அனைத்தையும் சீர்ப்படுத்துகிறார்; வாழ்வின் எப்பக்கமும் எல்லா ஆசீர்வாதமும் கொண்டவராக உங்களை மீண்டும் கட்டியெழுப்புகிறார்.

நகோமியும் அவ்விதமே உணர்ந்தாள். அவள், நம்பிக்கையுடன் சொந்த தேசத்தை விட்டு சென்றாலும், கணவனை, மகன்களை, கிட்டத்தட்ட எல்லாவற்றையும் இழந்த நிலையில் வெறுமையாக திரும்பினாள் (ரூத் 1:20,21). வேதனையுற்றவளாய், ''**நீங்கள் என்னை நகோமி என்று சொல்லாமல், மாராள் என்று சொல்லுங்கள்; சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார்**'' என்று கூறினாள். ஆனாலும் கர்த்தர் அவளை கசப்பில் விட்டுவிடவில்லை. மகிழ்ச்சியை திரும்ப கொடுத்ததுடன், அவள் வாழ்க்கையை, குடும்பத்தை திரும்பவும் கட்டுவித்தார்; இழந்தவற்றும் மேலாக அவளை ஆசீர்வதித்தார் (ரூத் 4:13-17).

நகோமிக்கு எல்லாவற்றையும் திரும்பி கொடுத்த அதே தேவன் உங்களிடம், ''பயப்படாதே. நான் உன்னைச் சீர்ப்படுத்துவேன்'' என்று கூறுகிறார். எல்லாமும் உங்களைவிட்டு போயிருக்கலாம். உங்களிடமிருந்து எல்லாமும், எல்லோரும் திருடப்பட்டிருக்கலாம் அல்லது பறிக்கப்பட்டிருக்கலாம். எல்லாவற்றையும் கர்த்தர் திரும்ப தருவார். உங்களிடமிருந்து பிரிக்கப்பட்டவர்களும் அவரது பலத்த கரத்தால் திரும்ப கொண்டு வரப்படுவார்கள். ஆகவே, உங்கள்

Dr. பால் தினகரன் - paul@jesuscalls.org
Pauldhinakaranofficial

இருதயம் கலங்காதிருப்பதாக.

கர்த்தர் உங்களை மறுபடியும் கூட்டிச் சேர்ப்பார்

வேதம், ''**உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற உன்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார்**'' (உபாகமம் 30:3) என்று கூறுகிறது.

'உனக்கு இரங்கி' என்ற வார்த்தைகள் தேவனின் அன்பான இருதயத்தை வெளிப்படுத்துகின்றன. அவர் உங்கள்பேரில் மனதுருக்கமாயிருக்கிறார். நீங்கள் ஒருபோதும் எதிர்பார்க்காத இடங்களுக்கு வாழ்க்கை உங்களைக் கொண்டுபோனாலும், கர்த்தர் உங்களை மறக்கவில்லை. வேதம், ''ஜாதிகளுக்கு (உங்களுக்கு) ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் (உங்களை) சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார்'' (ஏசாயா 11:12) என்று கூறுகிறது. இந்த வசனத்துக்கு, கர்த்தருக்கு எந்த இடமும் தூரமானதல்ல; எந்தச் சூழ்நிலையும் கடினமானதல்ல; எந்த இழப்பும் ஈடு செய்ய முடியாததல்ல என்று அர்த்தம்.

வேதம், ''**நான் உங்களுக்குக் காணப்படுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பி... திரும்பிவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்**'' (எரேமியா 29:14) என்று கூறுகிறது. ஒருவேளை நீங்கள் உடல்ரீதியாக அடிமைத்தனத்திற்குள் இல்லாதிருக்கலாம். ஆனால், உள்ளாக பயத்தை, நிராகரிப்பை, தனிமையை, குற்றத்தை, துக்கத்தை சுமந்துகொண்டிருக்கலாம். இம்மாதம் கர்த்தர், ''எல்லா சிறையிருப்பிலிருந்தும் நான் உன்னை விடுவிப்பேன்'' என்று கூறுகிறார். நீங்கள் புறக்கணிப்பை கண்ட அதே இடத்தில் தேவன் உங்களைக் கனப்படுத்துவார்.

பிரதீஷ், உண்மையாய் பணியாற்றினாலும், திடீரென தன் வேலையை இழந்தார். அவர் உள்ளம் வேதனையுற்றது. எதிர்காலத்தைக் குறித்த நிச்சயமின்மையால் நிறைந்தது. நொறுங்கிய இந்நிலையில் அவர் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்துக்கு வந்து, ஆண்டவரிடம் அழுதார். ஜெப வீரர் ஒருவர் அவருடன் ஜெபித்தார். தேவன் ஓர் அற்புதத்தின் வாயிலாக பதிலளித்தார். அவர் ஏமாற்றமடைந்த அதே நிறுவனம் மீண்டும் அவரை அழைத்தது. அதே அலுவலகத்தில் உயர்ந்த ஊதியமும் மிகுந்த கௌரவமும் கிடைத்தது. சத்துரு இழப்பாக்க நினைத்ததை தேவன் ஆசீர்வாதமாக மாற்றினார். கர்த்தரால் உங்களுக்கும் இப்படியே செய்ய முடியும்.

வேதம் கூறுகிறபடி, அவர் உங்களைச் சிறையிருப்பிலிருந்து வெளியே கொண்டு வந்து, பாலும் தேவனும் ஓடுகிற தேசத்துக்குள், பரிபூரணமும், சமாதானமும், தெய்வீக கிருபையும் விளங்குகிற இடத்துக்குள் நடத்துவார் (செப்பனியா 3:19). அவர் உங்களை வேலையை திரும்ப தருவார்; உங்கள் தொழிலை மீண்டும் கட்டுவார்; உங்கள் அழைப்பை, குடும்பத்தை உயிர்ப்பிப்பார்; உங்களை மீண்டும் கனப்படுத்துவார்.

வேதம், ''**நீங்கள் சிதறடிக்கப்பட்ட தேசங்களிலிருந்து உங்களைக் கூட்டிக் கொண்டு, இஸ்ரவேல் தேசத்தை உங்களுக்குக் கொடுப்பேன்**'' (எசேக்கியேல் 11:17) என்று கூறுகிறது. தேவன், நீங்கள் இழந்தவற்றை மட்டும் திரும்ப அளிப்பதோடு நில்லாமல், உங்கள் எல்லையை விரிவாக்கி, முன்பைக் காட்டிலும் அதிக கனத்தோடு உங்களை நிலைநிறுத்துவார். ஆகவே, சந்தோஷமாயிருங்கள்.

ஆண்டவர் ஏன் உங்களைச் சீர்ப்படுத்துகிறார்?

அவர் உங்கள் மேய்ப்பர் என்பதே எளிய பதிலாகும். இயேசு, ''நானே நல்ல மேய்ப்பன்'' என்று கூறியுள்ளார். நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம் ஜீவனை உங்களுக்காக சிலுவையில் கொடுத்தார். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக மட்டும் அவர் தம் விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தவில்லை; தம் இருதயத்தை நெருங்கி, தம் மந்தையில் சேர்த்துக்கொள்ளவும் சிந்தினார்.

ஆகவேதான், ஆண்டவர் காயப்பட்ட, நொறுக்கப்பட்ட, கைவிடப்பட்ட நிலையில் உங்களை ஒருபோதும் விட்டு விடமாட்டார். உங்களை மறுபடியுமாய் தம் அன்பின் அணைப்புக்குள் சேர்த்து, முழுமைப்படுத்த வாஞ்சிக்கிறார்.

வேதம், ''**அவைகளை ஜனங்களிடத்திலிருந்து புறப்படவும் தேசங்களிலிருந்து சேரவும்பண்ணி, அவைகளுடைய சுயதேசத்திலே அவைகளைக் கொண்டுவந்து, இஸ்ரவேல் மலைகளின்மேலும் ஆறுகள் அண்டையிலும் தேசத்தின் சகல வாசஸ்தலங்களிலும் அவைகளை மேய்ப்பேன்**'' (எசேக்கியேல் 34:13) என்று கூறுகிறது.

ஒருவேளை நீங்கள் வழிதவறிய, குழம்பிய, பாரப்பட்ட ஆடுபோல உணரலாம். ஆண்டவர், நல்ல மேய்ப்பராக தம் அன்பின் இருதயத்தை வெளிப்படுத்துகிறார். சிதறடிக்கப்பட்ட இடங்களிலிருந்து அவர் தம் ஆடுகளை சேர்ப்பதோடு மட்டுமல்ல, அவை பாதுகாப்பாய், சமாதானத்தோடு, பூரணத்தோடு வாழும்படி சேரவேண்டிய இடத்துக்கும் கொண்டு சேர்க்கிறார்.

இயேசு, பட்டணங்கள், கிராமங்கள் தோறும் சென்று ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கித்து, எல்லா நோய்களையும் வியாதியையும் குணமாக்கினார் என்று வேதம் கூறுகிறது (மத்தேயு 9:35,36). கூட்டத்தினரைப் பார்த்ததும் அவர்கள் மேய்ப்பனற்ற ஆடுகளைப் போல உதவியற்ற நிலையில் இருப்பதைக் கண்டு அவர் மனதுருகினார். இயேசு (மாம்சத்தில் வந்த தேவன்) உள்ளமுடைந்தோரை தேற்றினார்; வியாதியஸ்தர்களை குணமாக்கினார்; ஒடுக்கப்பட்டோரை விடுவித்தார்; மக்களை பூரணத்துக்குத் திருப்பினார். அதே இயேசு

இம்மாதம், அதே மனதுருக்கத்துடன் உங்களைப் பார்க்கிறார். உங்கள் போராட்டங்களை அவர் அறிந்திருக்கிறார். மௌனமாக வடிக்கும் கண்ணீரை காண்கிறார்.

அலோக் குஜ்ஜூரின் சாட்சி என்னை அதிகமாய் தொட்டது. அவர், ''காதில் ஏற்பட்ட தொற்றினால் (CSOM) நான் பல ஆண்டுகள் அவதிப்பட்டேன். ஒருமுறை அறுவைசிகிச்சை செய்த ஓராண்டுக்குள் மீண்டும் பிரச்னை ஏற்பட்டதால் மருத்துவர் இன்னொரு அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென கூறினார். அந்தத் தருணத்தில் எனக்கு துறை ரீதியான பணி உயர்வுக்கான முக்கிய தேர்வும் இருந்தது. அறுவை சிகிச்சை செய்து கொள்ளலாமா அல்லது தேர்வுக்கு ஆயத்தமாகலாமா என்று திகைத்து மிகவும் கலங்கினேன். அந்த இக்கட்டான நேரத்தில் என் தங்கை இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை தொடர்புகொண்டு என் சுகத்துக்காகவும் தேர்வுக்காகவும் ஜெபிக்கும்படி வேண்டினாள். ஜெப வீராங்கனை ஒருவர் எனக்காக அதிகாரத்தோடு ஜெபித் தார்கள். ''இயேசுவின் நாமத்தினால் உங்கள் காது குணமாகிவிட்டது'' என்று அவர்கள் கூறியதுமே, என் காதில் வழிந்துகொண்டிருந்த சீழ் நின்றுபோனது. மீண்டும் மருத்துவரிடம் சென்றபோது, அவர் என்னை சோதித்துப் பார்த்து ஆச்சரியப்பட்டார். இப்போது நான் பூரண நலத்துடன் இருக்கிறேன்'' என்று எழுதியிருக்கிறார்.

அலோக்கை குணமாக்கிய அதே இயேசு இப்போதும் அற்புதங்களைச் செய்கிறார். நம் நல்ல மேய்ப்பரின் மனதுருக்கம் அப்படிப்பட்டது. அவர் வியாதியுற்றோரை இன்னும் குணமாக்குகிறார்; உடைந்தோரை சீர்ப்படுத்து கிறார்; தம் பிள்ளைகளை நம்பிக்கையால் நிரப்புகிறார். இம்மாதம் அவர், ''என்னிடம் வா'' என்று அன்போடு அழைக்கிறார்.

நல்ல மேய்ப்பர் உங்களை அழைக்கிறார்

இயேசு, ''**கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்**'' (லூக்கா 13:34) என்று கூறுகிறார். தேவனின் இருதயம் இப்படியே வாஞ்சிக்கிறது. அவர் உங்களை தம் செட்டைகளின் கீழ் பாதுகாத்து, தேற்றி, இளைப்பாறுதல் தர விரும்புகிறார்.

ஒருவேளை நீங்கள் ஆண்டவரிடமிருந்து விலகிப் போயிருக்கலாம். வேதனை, ஏமாற்றம், பாவம் உங்களுக்கும் அவருக்கும் தூரத்தை ஏற்படுத்தியிருக்க லாம். திரும்ப வரும் தகுதியில்லை என்று நீங்கள் நினைக் கலாம். ''இவற்றையெல்லாம் செய்துவிட்டு எப்படி தேவ னிடம் வர முடியும்?'' என்று யோசிக்கலாம். ஆனால், இயேசுவின் அன்பு உங்கள் தோல்விகளைக் காட்டிலும் பெரியது. நீங்கள் எவ்வளவு தொலைவு போயிருந்தாலும், இயேசு உங்களை மறுபடியுமாய் அழைக்கிறார். அவர் உங்களை மன்னிப்பதற்கு, சுத்திகரிப்பதற்கு, தம் சொந்த பிள்ளையாக ஏற்றுக்கொள்ள விரும்புகிறார்.

உங்கள் பாவங்களுக்காக அவரே தம் இரத்தத்தை சிலுவையில் சிந்தினார். ஆகவே, இயேசுவை அன்றி பரலோகத்திற்கு வேறு வழியில்லை. இயேசுவின் இரத்தம் சகல பாவங்களும் நீங்க நம்மை சுத்திகரிக்கிறது. வேறு யாரும் உங்களுக்காக கிரயத்தை செலுத்தவில்லை. வேறு யாரும் மரணத்தை ஜெயித்து, மூன்றாம் நாளில் எழும்பவில்லை. ஆகவேதான் சிலுவையில் கள்ளனும், ''இயேசுவே என்னை நினைத்தருளும்'' என்று கூப்பிட்டான். அப்போதே ஆண்டவர் அவனுக்கு பரதீசின் வாசலை திறந்தார். அவ்வாறே இம்மாதம் நீங்கள் இயேசுவிடம் திரும்பினால், அவர் பரலோகத்தை உங்களுக்குத் திறப்பார்; உங்கள் வாழ்க்கையை தம் கிருபையினால் நிரப்புவார்.

இம்மாதம் அவர் உங்களிடம் வருகிறார். ''நீ என் ஆடு. நான் உன் நல்ல மேய்ப்பன். நான் உன்னை அக்கறையாய் கவனிப்பேன். என் இரத்தத்தினால் உன்னை சுத்திகரிப்பேன். உன்னை பரிசுத்தமாக்கு வேன். நீ என்னுடையவன்(ள்)'' என்று கூறுகிறார். அவரிடம் வருவீர்களா? உங்கள் இருதயத்தை இயேசு விடம் கொடுங்கள். உங்கள் மேய்ப்பராகும்படி அவரிடம் கேளுங்கள். அவர் ஒருபோதும் உங்களை நிராகரிக்க மாட்டார். உலகத்தின் வழிகளை விட்டு, உங்கள் வாழ்க்கையை முழுவதுமாக இயேசுவை நோக்கி திருப்புங்கள். அவரது ஆடாக பரிசுத்தப்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ தீர்மானியுங்கள்.

உங்கள் குடும்பத்தையும் எதிர்காலத்தையும் சீர்ப்படுத்துவார்

ஆண்டவரால் யாரெல்லாம் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்; சீர்ப்படுத்தப்படுவார்கள்?

முதலாவது உங்கள் குடும்பத்தினர். வேதம், ''கர்த்த ராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்'' (அப்போஸ்தலர் 16:31) என்று கூறுகிறது. நீங்கள் ஆண்டவரை நம்பி, அவரில் விசுவாசம் வைக்கும்போது, அவரது இரட் சிப்பின் கிருபை உங்கள் குடும்பத்தினரையும் தொடும். தேவனால் உங்கள் குடும்பத்தினரையும் சேர்க்க முடியும்; தம் பிள்ளைகளாக மறுரூபப்படுத்த முடியும்.

ஊதாரியான மகனை நினைத்துப் பாருங்கள். அவன் பாவத்தினால் எல்லாவற்றையும் இழந்துபோனான். தகப்பன் அவனுக்குக் கொடுத்த எல்லாவற்றையும் வீணாக்கினான்; தாழ்ந்த இடத்துக்கு தள்ளப்பட்டு மனமுடைந்தான். ஆனாலும் மிக தாழ்ச்சியான நிலையில், அவன் கண்கள் திறந்தன. தகப்பனுடைய வீட்டை அவன் நினைத்து, திரும்ப தீர்மானித்தான்.

வேலைக்காரனாக ஏற்றுக்கொள்ளும் படி கேட்கவே அவன் நினைத்தான். ஆனால், தகப்பன் அவனை தூரத் திலே பார்த்த மாத்திரத்தில், ஓடி வந்து, மனதுருகி, ''என் மகனே!'' என்று அழைத்தார். உயர்ந்த வஸ்திரத்தை அவனுக்கு அணிவித்து, மகன் என்னும் ஸ்தானத்தை திரும்ப அளித்தார். விரலில் மோதிரம் அணி வித்து, அவன் திரும்பி வந்ததை விருந்துடன் கொண்டாடினார்.

ஆண்டவர் உங்கள் பிள்ளைக ளுக்கும் இப்படியே செய்வார். வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் கெஸியாள் என்னும் தாயார் எங்களிடம் ஒரு சாட்சியை பகிர்ந்துகொண்டார்கள். அவர்கள் மகன், தீய பழக்கங் களுக்குள் விழுந்துபோய் மிகவும் பாடுபட்டார். அவர் விலகிச் செல்வதை கண்டு தாயாகிய அவர்கள் உள்ளம் வேதனையாலும் உதவியற்ற நிலையாலும் நிறைந்தது. இந்த நிலையில் அவர்கள் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்துக்கு வந்து, ஜெப வீரருடன் இணைந்து ஆண்டவர் தன் மகனோடு இடைப்படவேண்டுமென்று அழுது ஜெபித்தார்கள். ஆண்டவர் அந்தக் கூப்பிடுதலுக்குப் பதில் கொடுத்தார்; இரண்டே நாட்களில் அவர்கள் மகன் அந்த அடிமைத்தனங்களிலிருந்து முற்றிலும் விடுதலை பெற்றார். மனுஷருக்கு கூடாது என்று காணப்படுகிற காரியங்கள் தேவனால் கூடும்.

நல்ல மேய்ப்பரை விட்டு எந்தப் பிள்ளையும் தூரமாகி விடவில்லை. பிள்ளைகளையும் இளைஞர்களையும் பார்க்கும்போது எங்கள் உள்ளத்தில், அவர்கள் நல்ல மேய்ப்பராகிய இயேசுவை அண்டி நடக்கவேண்டும்; தங்கள் வாழ்வில் அவரது உயர்ந்த நோக்கங்களை நிறை வேற்றவேண்டும் என்ற ஆழ்ந்த பாரம் உண்டாகிறது.

இந்தப் பாரத்தினால்தான், பிறந்ததிலிருந்து 21 வயது வரைக்கும் இளம் பங்காளர் திட்டத்தின் வாயிலாக பிள்ளைகளை தாங்குகிறோம். 22 முதல் 35 வயது வரையுள்ள வாலிப ஆண்கள், பெண்களின் தெய்வீக பாதுகாப்பு, ஞானம், செழிப்புக்காக வாலிபர் ஆசீர்வாத திட்டத்தின் வாயிலாக ஜெபிக்கிறோம். உங்கள் பிள்ளைகள் அல்லது பேரப்பிள்ளைகள் ஆசீர்வாதம் பெறவேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அவர்களை இத்திட்டத்தில் இணைத்திடுங்கள்.

JOIN IN YPP

JOIN IN YBP

23ம் சங்கீதம் வாக்குப்பண்ணுகிறபடி, உங்கள் நல்ல மேய்ப்பர் அமர்ந்த தண்ணீர்களண்டையும், புல்லுள்ள இடங்களண்டையும் நடத்திச் செல்கிறார். அவர் உங்கள் பெலனை புதுப்பித்து, உங்கள் ஆவியை புதிதாக்கி, தம் நாமத்துக்காக உங்களை நீதியின் பாதையில் நடத்துவார்.

வெட்கத்திலிருந்து கனத்துக்கு

நிறைவாக, ஆண்டவர், உடைந்த உங்கள் வாழ்க்கையை மறுபடியும் கட்டும்போது, வெட்கத்தை கனமாக மாற்றுவார். அவர் உங்கள் குடும்ப வாழ்வை சீர்ப்படுத்துவார்; மீண்டும் உங்களை முழுமைப்படுத்துவார்.

வேதம், ''நீ இனிக் கைவிடப் பட்டவள் என்னப்படாமலும், உன் தேசம் இனிப் பாழான தேசமென்னப் படாமலும், நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப் படும்; கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்; உன் தேசம் வாழ்க்கைப்படும்'' (ஏசாயா 62:4) என்று கூறுகிறது.

மக்கள் உங்களை கைவிடப்பட்டவர் என்று அழைக்க லாம். உங்கள் வாழ்க்கை முறிந்துபோனதென்று அவர்கள் சொல்லலாம். இனி உங்களுக்கு எதுவுமே நல்லதாய் நடக்காது என்றும் கூறலாம். ஆனால், ஆண்டவர், ''இல்லை. நான் உன்னை எப்சிபா என்று அழைப்பேன். நான் உன்மேல் பிரியமாயிருக்கிறேன்'' என்று கூறுகிறார்.

பிரிந்த குடும்பங்கள் சீர்ப்படும். முறிந்த உறவுகள் சரிப்படுத்தப்படும். திருமணத்திற்காக காத்திருப்போர் பாக்கியம் பெறுவார்கள். குழந்தைக்காக ஏங்குகிறவர்கள் களிப்புறுவார்கள். கர்த்தராகிய உங்கள் நல்ல மேய்ப்பர், உங்கள் பாரத்தை, கண்ணீரை, பதில் கிடைக்காத விண்ணப்பத்தைக் குறித்து கரிசனையாயிருக்கிறார்.

சென்னையைச் சேர்ந்த மாக்தலின் என்ற சகோதரி, ''சரியாக புரிந்துகொள்ளாத காரணத்தினால், என் சகோதரி லில்லியும் அவர் கணவரும் மூன்று ஆண்டுகள் பிரிந்து வாழ்ந்தனர். இந்த உறவு முறிவைக் குறித்து வேதனையுற்ற நான், தவறாமல் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்துக்குச் சென்று, அவர்கள் ஒப்புரவாகவேண்டும் என்று ஊக்கமாக ஜெபித்தேன். அந்த வேளையில் Dr. பால் தினகரனை சந்தித்தோம். அவர் எங்கள் குடும்பத்துக்காக ஜெபித்தார். ''இந்தக் குடும்பத்தின்மேல் இருக்கும் பிசாசின் வல்லமையை கடிந்துகொள்கிறேன்'' என்று கூறி பிரார்த்தனை செய்தார். தேவனுடைய அற்புத கிருபையினால் இரண்டே நாட்களில் என் சகோதரி லில்லியின் கணவர் வீடு திரும்பினார். தற்போது லில்லியும் அவள் கணவரும் முழுவதுமாக ஒப்புரவாகி, சந்தோஷமாக வாழ்கிறார்கள்.''

அன்பானவர்களே, லில்லியின் குடும்பத்துக்கு செய்ததை உங்களுக்கும் ஆண்டவர் செய்வார். நீங்கள் இழந்த எல்லாவற்றையும் அவர் திரும்ப தருவார்.

ஜெபம்: அன்புள்ள தகப்பனே, நொறுங்கிய எல்லா இருதயமும், உடைந்த எல்லா குடும்பமும் உம் பலத்த கரத்தால் சீர்ப்படுத்தப்படுவதாக. நல்ல மேய்ப்பராகிய இயேசு, ஒவ்வொருவரையும் சமாதானத்துக்குள், கனத் துக்குள், பரிபூரண ஆசீர்வாதத்துக்குள் நடத்துவாராக, ஆமென்.

Karunya
DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++

33rd CONVOCATION
Knowledge, Character and Service

CEREMONY

33rd CONVOCATION

Karunya University celebrated its 33rd Convocation Ceremony, honouring the achievements of its graduating students and reaffirming its vision of nurturing professionals with knowledge, character, and a heart for service.

The ceremony was presided over by **Dr. Paul Dhinakaran, Chancellor,** who conferred degrees upon the graduates and encouraged them to embrace emerging technologies, pursue lifelong learning, and become innovators who create meaningful change. **Mr. Samuel Paul Dhinakaran, Vice President**, congratulated the graduating class and inspired them to lead with excellence, integrity, and compassion.

Delivering the Convocation Address, **Mr. R. Velusamy,** President – Automotive Business, Mahindra & Mahindra Ltd., and Managing Director, Mahindra Electric Automobile Ltd., motivated students to transform challenges into opportunities through innovation, resilience, and continuous learning. In recognition of his exemplary leadership and contributions to the automotive sector, he was conferred the **Honorary Degree of Doctor of Science (Honoris Causa)**.

The University also celebrated academic distinction through the **Chancellor's Awards**, recognising outstanding student achievers across various disciplines. Demonstrating Karunya University's commitment to compassion beyond the classroom, students presented **wheelchairs and battery-operated mobility scooters to persons with disabilities**, reflecting the institution's dedication to inclusive development and community service.

A momentous convocation with

Mr. R Velusamy

President, Automotive Business, Mahindra & Mahindra Ltd, Chennai. and Managing Director, Mahindra Electric Automobile Ltd, Chennai.

as Chief Guest and Doctorate Awardee

The 33rd Convocation was a celebration of achievement, gratitude, and new beginnings, as another generation of Karunya graduates stepped forward to serve society with competence, integrity, and purpose.

'Caps in the Air: Press Release Highlights'

Admissions '26

Closing Soon

PROGRAMS OFFERED

- ENGINEERING
- COMMERCE
- AGRICULTURE
- DIGITAL FORENSICS
- ARTIFICIAL INTELLIGENCE
- PHYSICAL SCIENCES
- HEALTH SCIENCES
- MEDIA
- MBA
- Online B.Com
- Online MBA

APPLY NOW!

Scan QR Code to Start the Admission Process

Karunya Institute of Technology and Sciences,

Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114. Tamil Nadu, India.
E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu

Toll Free: 1800 42 54 300, 1800 88 99 888

குடும்ப பகுதி

வீடு சமாதானத்தினால் நிரப்பும்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இம்மாதத்திற்கு, "கர்த்தாவே, எங்களுக்குச் சமாதானத்தைக் கட்டளையிடுவீர்; எங்கள் கிரியைகளையெல்லாம் எங்களுக்காக நடத்திவருகிறவர் நீரே" (ஏசாயா 26:12) என்ற அருமையான வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா ஆசீர்வாதமும், எல்லா வெற்றியும், சமாதான காலமும் கர்த்தரிடமிருந்தே வருகிறது.

தங்களுக்காக, கர்த்தரின் பலத்த கரம் செயல்பட்டதைக் கண்ட பிறகு தேவ ஜனங்கள் இப்படிப் பாடினார்கள். சத்துருக்கள் அவர்களுக்கு விரோதமாக எழும்பினாலும், கர்த்தரே அவர்களுக்காக யுத்தம்பண்ணி அவர்களுக்குச் சமாதானத்தை அருளிச்செய்தார். அவ்வாறே, உங்கள் குடும்பம் எந்தப் போராட்டத்தை இம்மாதம் சந்தித்தாலும் நீங்கள் தனியே சண்டையிடப்போவதில்லை. கர்த்தர் உங்களோடிருக்கிறார்; அவரே உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்.

யாரும் பார்க்காத பாரங்களை அநேக குடும்பங்கள் சுமந்துகொண்டிருக்கின்றன. மலர்ந்த முகங்களுக்கும் அன்றாட வேலைகளுக்கும் பின்னே மௌன மான வேதனை இருக்கும். சில குடும்பங்களில் கணவன், மனைவி மற்றும் பெற்றோர், பிள்ளைகளுக்கு இடையே காணப்படும் தவறான புரிதல் பெரிய பாரமாக உள்ளது. பண நெருக்கடி, வியாதி, உணர்வுப்பூர்வமான காயங்கள், தனிமை ஆகியவையும் போராட்டங்களாக இருக்கலாம்.

ஒரு காலத்தில் உங்கள் வீட்டில் நிறைவாய் காணப்பட்ட சமாதானம் மெல்ல மங்கிப்போயிருக்கலாம். ஆண்டவர், மறைவாக வடிக்கும் கண்ணீரையும், மௌனமான கூப்பிடுதலையும் காண்கிறார். "**அந்தப் பாரத்தை என்னிடம் கொடுத்துவிடு; உனக்காக நான் யுத்தம்பண்ணட்டும்**" என்று அன்புடன் கூறுகிறார்.

இந்தச் சத்தியத்தை தாவீது ஆழமாகப் புரிந்துகொண்டிருந்தான். ஆகவேதான் அவன், "**எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்**" (சங்கீதம் 57:2) என்று

EvangelinePaulDhinakaran | evangeline@jesuscalls.org

கூறினான். நம் குடும்பத்திலுள்ள எல்லா சச்சரவுகளும் மனுஷீக ஞானத்தினாலோ, வார்த்தைகளினாலோ தீர்க்கப்பட முடியாதவையாயிருக்கும். தெய்வீக இடைப்படுதல் அவற்றுக்கு அவசியமாயிருக்கும்.

மரியாளையும் மார்த்தாளையும் எண்ணிப் பாருங்கள். லாசரு மரித்தபோது, அவர்கள் வீடு துக்கத்தினால் நிறைந்தது. அவர்கள் உள்ளங்கள் உடைந்தன; எல்லாவற்றையும் இழந்துவிட்டதுபோல் தோன்றியது. ஆனால், இயேசு வந்தார்; அவர்கள் துக்கத்திற்குள் பிரவேசித்து, அவர்களோடு அழுதார்.

அவர் கண்ணீர் விட்டதோடு நின்றுவிடவில்லை. கூடவே கூடாதென்று காணப்பட்ட அவர்கள் சூழ்நிலைக்குள் அவர் பிரவேசித்து, லாசருவை கல்லறையிலிருந்து வெளியே வரும்படி அழைத்தார். நம்பிக்கையற்றதாய் காணப்பட்ட சூழ்நிலை, அவரது வல்லமையால் மாறியது.

அவ்வண்ணமே, ஆண்டவர் உங்கள் குடும்பத்தில் நிலவும் வேதனையான சூழ்நிலைக்குள்ளும் வர முடியும். செத்துப்போனதாய் காணப்படும் உறவுகளுக்குள் ஜீவ சுவாசத்தை அவரால் ஊத முடியும்; காயப்பட்ட அன்பை அவரால் மீட்க முடியும். நம்பிக்கையற்றதாய் காணப்படும் சூழ்நிலைக்குள் நம்பிக்கையை அளிக்க முடியும்.

> உங்கள் குடும்ப சண்டைகளை தேவனிடம் ஒப்படையுங்கள்; அவரது சமாதானம் உங்கள் வீட்டில் ஆளுகை செய்திடும்

பாக்கியமான குடும்பத்தின் இரகசியம்

நாம் எவ்வாறு தொடர்ந்து சமாதானமாக வாழ முடியும்?

வேதம், "**எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான்**" (நீதிமொழிகள் 28:14) என்று கூறுகிறது. தேவ பயம் என்பதற்கு அவருக்கு அஞ்சி நடுங்குவது என்று அர்த்தமல்ல. அது, அவரை கனம்பண்ணுவது, சார்ந்திருப்பது, அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகும்.

ஒருமுறை சூரியகாந்தி தோட்டம் ஒன்றைப் பார்த்தேன். எல்லா சூரியகாந்தி பூக்களும் சூரியனுக்கு நேராக வானத்தைப் பார்ப்பதுபோல் இருந்தன. அன்று, சூரியகாந்தி பூ எனக்கு அருமையான பாடத்தைக் கற்றுக் கொடுத்தது. சூரியகாந்தி மலர் எப்போதும் சூரியனின் பக்கமாக திரும்பியிருப்பதுபோல், நானும் எல்லாவற்றுக்காகவும் ஆண்டவரையே நோக்கியிருக்கவேண்டும்.

அவ்விதமாகவே, ஒவ்வொரு குடும்பமும் எல்லா காரியத்துக்கும் தேவனை நோக்குவதற்கு கற்றுக்கொள்ள வேண்டும். பிள்ளைகளை வளர்ப்பதாக இருக்கட்டும்; முக்கியமான முடிவுகளை எடுப்பதாக இருக்கட்டும்; பொருளாதார பொறுப்புகளை சுமப்பதாக இருக்கட்டும்; முரண்பாடுகளை சந்திப்பதாக இருக்கட்டும்; எல்லாவற்றுக்கும் அவரையே சார்ந்துகொள்ளவேண்டும். அப்போது அவரது ஆசீர்வாதம் நம் வீட்டில் தங்கியிருக்கும்.

வேதம், "**கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்**" (சங்கீதம் 138:8) என்று கூறுகிறது. எவ்வளவு ஆறுதலான வாக்குத்தத்தம்! நாம் அவர்மேல் கண்களை வைத்திருக்கும்போது, நம் குடும்பத்துக்கான எல்லாவற்றையும் அவர் பொறுப்பெடுத்துக்கொள்வார்.

பிரச்னைக்குள் இயேசு வந்தபோது...

டெய்சி ராணி என்ற தலைமையாசிரியை, இருபது ஆண்டுகளாக குடும்ப ஆசீர்வாத திட்டத்திலும் உறுப்பினராக இருக்கிறார்கள். அவர்கள் சாட்சி என் உள்ளத்தைத் தொட்டது.

அவர்கள் குடும்பம் திடீரென இக்கட்டுக்குள் சிக்கிக் கொண்டது. பில்லிசூனியத்தால் அவர்கள் ஆவிக்குரிய விதத்தில் ஒடுக்கப்பட்டார்கள். "நீ பிரயோஜனமில்லாதவள். உனக்குப் பெலனேயில்லை. நீ தோற்றுப்போவாய்" என்ற குரல்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தபடியால் பயம் அந்தச் சகோதரியின் உள்ளத்தைப் பிடித்தது.

நாளுக்கு நாள், பாரம் கனமாக மாறியது. பயம், கலக்கம், உணர்வுரீதியான வேதனை அவர்கள் வீட்டை நிறைத்தது. குடும்பத்திலும், வேலையிலும் கவனம் செலுத்த முடியாமல் துக்கத்தில் உழன்றார்கள்.

வேதனையான அந்தவேளையில் அவர்கள் ஜெபிப்பதற்காக பெதஸ்தா ஜெப மையத்திற்கு வந்தார்கள். நான் என் கைகளை அவர்கள்மேல் வைத்து, இயேசுவின் நாமத்தில் அசுத்த வல்லமைகளை கடிந்து கொண்டேன். "ஆண்டவர் இயேசுவே, தயவு செய்து உம் மகளை விடுவித்தருளும். பயத்தின் எல்லா ஆவியும் அவர்களை விட்டு முற்றிலும் அகலட்டும்" என்று ஜெபித்தேன்.

அந்தத் தருணத்தில் ஆண்டவர் ஓர் அற்புதம் செய்தார். டெய்சி ராணி, பூரண விடுதலையை அனுபவித்தார்கள். இயேசுவின் வல்லமையான நாமத்தில் பயத்தின் ஆவி அவர்களை விட்டு விலகியது. அவர்களை அழுத்திக்கொண்டிருந்த பாரம் முழுமையாய் அகன்றது. ஆண்டவர் அவர்களை தம் சமாதானத்தினாலும் புதுப் பெலனாலும் நிறைத்தார். உடலும் மனமும் ஆவியும் சீரடைந்தவர்களாக அவர்கள் வீடு திரும்பினார்கள். அவர்கள் குடும்பத்திலிருந்து களவாடப்பட்ட சமாதானமும் சுகமும் தேவ கிருபையினால் மறுபடியும் கிடைத்தன.

அன்பானவர்களே, அதே இயேசு இம்மாதம் உங்கள் வீட்டுக்கு வருகிறார். வியாதி, தவறான புரிதல், ஒடுக்குதல், கவலை, உணர்வுப்பூர்வமான வேதனை எது உங்கள் சமாதானத்தை திருடியிருந்தாலும் ஆண்டவரால் அதை அகற்ற முடியும். அவர் சமாதானப் பிரபு.

இப்போதும் ஆண்டவர் தம் அன்பின் கரத்தை உங்கள் குடும்பத்தின்மேல் நீட்டுகிறார். அவர் எல்லா பாரத்தையும் அகற்றுவார்; சங்கிலியை உடைப்பார்; உங்கள் வீட்டில் தம் சமாதானத்தை திரும்ப அளிப்பார். சீக்கிரமாகவே உங்கள் குடும்பம் களிகூர்ந்து, "கர்த்தர் பெரிய காரியங்களை நமக்குச் செய்தார்" என்று கூறும். ஆகவே, அவரைப் பற்றிக்கொள்ளுங்கள்; அவரை நம்புங்கள்; அவருக்குப் பயப்படுங்கள். அவரே உங்கள் குடும்பத்தை வழிநடத்தட்டும்.

உங்கள் வீட்டை ஆண்டவர் தற்காப்பார். அவரது சமாதானம் உங்கள் குடும்பத்தில் ஆளுகை செய்யும்.

ராஞ்சி
ஜெப கோபுரத்தை புதுப்பிக்க இயேசு அழைக்கிறார்
ஊழியத்துக்கு உதவுங்கள்

"நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக்கொண்டுவந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஆகாய் 1:8)

ராஞ்சி ஜெப கோபுரத்தில் ஆயிரக்கணக்கானோர் தேவனுடைய அன்பை, ஆறுதலை, அற்புதங்களைச் செய்யும் வல்லமையை அனுபவிக்கின்றனர். அவருடைய தெய்வீக இடைப்படுதலை ஏராளமானோர் நாடுகிறபடியால் ஆண்டவர் இந்த ஜெப கோபுரத்தை ஜெபத்துடன் விரிவாக்கி, சேவைகளை பெலப்படுத்தும்படி எங்களை வழிநடத்தியுள்ளார்.

இந்தத் தரிசனத்தின் ஒரு பகுதியாக, நாங்கள் பழுந்தடைந்த வற்றை புதுப்பிக்கிறோம். ஜெப கோபுரத்தில் டிஜிட்டல் LED திரைகள், டிஜிட்டல் ஒலியமைப்பு உள்ளிட்ட நவீன வசதிகளை செய்கிறோம். அனைத்து வயதினரும், குறிப்பாக இளைய தலைமுறையினர் ஆண்டவருடன் இடைப்பட ஏற்ற ஆராதனை சூழலை உருவாக்கு கிறோம். கர்த்தரின் வாசஸ்தலம் சிறப்பானதாக, தொடர்ந்து வாழ்க்கையை மறுரூபமாக்குவதாக விளங்கும்படி இயன்ற அளவு நல்லதாக உருவாக்க விரும்புகிறோம்.

தேவன் கொடுத்த தரிசனத்தை நிறைவேற்ற, ரூ.3 கோடி தேவை என்று விசுவாசத்தோடு கணக்கிடப்பட்டுள்ளது. இந்த விரிவாக்கத்தின் வாயிலாக, ஜார்க்கண்ட், பீகார், மேற்கு வங்காளம், ஒடிசா, சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களிலிருந்து தெய்வீக இடைப்பாட்டை தேடி வரும் ஆயிரக்கணக்கானோருக்கு ஊழியம் செய்ய முடியும் என்று ஜெபத்துடன் எதிர்நோக்குகிறோம். உதாரத்துவமான உங்கள் நன்கொடை கணக்கற்றோர் தேவனுடைய அன்பை அனுபவிக்கவும், அவரது ஆறுதலை பெற்றுக்கொள்ளவும், அவரது அற்புதங்களைக் காணவும் உதவும்.

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல்கியா 3:10)

ராஞ்சி ஜெப கோபுரம்
கட்டுமான நிதி

இந்தப் புதுப்பிக்கும் பணியை ஆதரித்திடுங்கள்:

₹5,000 | ₹10,000 | ₹25,000 | ₹50,000 | ₹1,00,000 | ₹5,00,000

அல்லது ஆண்டவர் உங்களை நடத்துகிறபடி ஏதாவது ஒரு தொகை

QR codeஐ ஸ்கேன் செய்து நன்கொடை அளிக்கலாம்

www.jesuscalls.org

வாழ்க்கையை மறுரூபமாக்கும் ஊழியத்தில் பங்கு பெறுங்கள். தற்போதைய தேவை:

* 1 பகுதி ஊழிய மேலாளர் * 4 மன்றாட்டு ஊழியர்கள் * 50 ஜெப வீரர்கள் / ஜெப வீராங்கனைகள் * 50 ஸ்தானாபதிகள் * 30 வாலிப ஸ்தானாபதிகள் * 10 நற்செய்தியாளர்கள்

boranchi@jesuscalls.org +91 63807 52243

கர்த்தருடைய வீட்டைக் கட்டுங்கள்; கர்த்தர் உங்கள் வீட்டைக் கட்டுவார்

அற்புதமான பணியிட மாற்றம்

CISFல் மத்திய அரசுப் பணியைச் செய்யும் எனக்கு கடந்த நான்கு ஆண்டுகளாக சூரத்திலுள்ள ONGC, Haziraவில் பணி கொடுத்திருந்தார்கள். சொந்த ஊரை விட்டு அவ்வளவு தூரம் சென்று வருவது சிரமமாக இருந்ததோடு, குடும்பத்துடன் நேரம் செலவிடவும் முடியவில்லை. 2025 டிசம்பர் மாதம் ராஞ்சி ஜெப கோபுரத்துக்கு வந்து ஜெப வீரர்களுடன் இணைந்து ஜெபித்ததோடு, வீட்டுக்கு அருகில் ஓரிடத்தில் ஆண்டவர் எனக்கு பணியிட மாற்றம் கொடுக்கவேண்டும் என்று ஜெபிக்கும்படி விண்ணப்பமும் அளித்தேன். ஆண்டவர் அந்த விண்ணப்பத்துக்கு அற்புதவிதமாக பதிலளித்தார். இரண்டே மாதங்களில் 2026 பிப்ரவரியில் வருடாந்தர பணியிட மாற்றத்தின்போது டெல்லியி

லுள்ள DMRCல் அமர்த்தப்பட் டேன். தேவனைத் துதிக்கி றேன். எனக்காக ஜெபித்ததற் காக ராஞ்சி ஜெப கோபுர ஜெப வீரர்களுக்கு நன்றி தெரிவிக் கிறேன்.

- சாலொமோன், பொகாரோ, ஜார்க்கண்ட்.

இன்றைய இறை தியானம்

ஆகஸ்ட் 2026

1	**சங்கீதம் 147:2** - கர்த்தர் கட்டுகிறவர் **தியானத்திற்கு:** 1 சாமு. 25:28; 1 நாளா. 17:10; மத். 16:18
2	**சங்கீதம் 37:5** - கர்த்தர் காரியத்தை வாய்க்கப்பண்ணுவார் **தியானத்திற்கு:** 2 நாளா. 26:5; எஸ்றா 6:14; நெகே. 1:11; 6:16
3	**மத்தேயு 6:6** - கர்த்தர் பலனளிப்பார் **தியானத்திற்கு:** யோபு 34:11; சங். 62:12; புலம்பல் 3:64
4	**ஏசாயா 44:5** - நீங்கள் கர்த்தருடையவர்கள் **தியானத்திற்கு:** லேவி. 20:26; உபா. 14:2; ஏசாயா 43:1
5	**நியாயாதிபதிகள் 6:12** - கர்த்தர் உங்களோடிருக்கிறார் **தியானத்திற்கு:** யோசுவா 1:5; ஏசாயா 41:10; பிலி. 4:9
6	**சங்கீதம் 46:1** - கர்த்தர் நம் பெலனாயிருக்கிறார் **தியானத்திற்கு:** யாத் 15:2; சங். 118:14; ஏசாயா 49:5
7	**லேவியராகமம் 26:4** - ஏற்ற வேளையில் ஆசீர்வாதம் **தியானத்திற்கு:** சங். 145:15; பிர. 3:11; எபி. 4:16
8	**1 யோவான் 5:14** - செவிகொடுக்கிற தேவன் **தியானத்திற்கு:** நியா. 13:9; சங். 3:4; 18:6; மத். 20:29-34
9	**எரேமியா 30:17** - கர்த்தர் காயங்களை ஆற்றுவார் **தியானத்திற்கு:** யோபு 5:18; சங்கீதம் 147:3; ஓசியா 6:1
10	**உபாகமம் 31:8** - கர்த்தர் உங்களுக்கு முன்பாக போகிறவர் **தியானத்திற்கு:** யாத். 13:21; 33:14; சங். 68:7,8; ஏசாயா 45:2; 52:12
11	**எரேமியா 46:27** - கர்த்தர் நம்மை இரட்சிப்பார் **தியானத்திற்கு:** சங். 62:1,2; தானி. 3:28,29; ரோமர் 10:9,10
12	**சங்கீதம் 107:20** - கர்த்தர் நம்மை குணமாக்குகிறவர் **தியானத்திற்கு:** 2 இராஜா. 20:5,6; சங். 30:2; ஏசாயா 57:19
13	**அப்போஸ்தலர் 16:31** - இயேசு கிறிஸ்துவை விசுவாசி **தியானத்திற்கு:** யோவான் 20:29; அப். 19:4; ரோமர் 10:11; கலா. 2:15
14	**1 நாளாகமம் 4:10** - தீங்கு இல்லை **தியானத்திற்கு:** ஆதி. 31:7; எண். 23:21; சங். 10:6; 41:1
15	**யாத்திராகமம் 19:6** - நீங்கள் தேவனுடைய பரிசுத்த ஜாதி **தியானத்திற்கு:** உபா. 14:2; 26:19; எஸ்றா 8:28; 1 பேதுரு 2:9
16	**நீதிமொழிகள் 13:25** - திருப்தியடைவீர்கள் **தியானத்திற்கு:** ரூத் 2:1-18; நெகே. 9:21-25; மத். 5:6
17	**சங்கீதம் 34:7** - கர்த்தர் நம்மை விடுவிக்கிறவர் **தியானத்திற்கு:** யாத். 6:6,7; 2 சாமு. 22:18-20; சங். 107:6
18	**யோவான் 14:23** - தேவன் அன்பாயிருக்கிறார் **தியானத்திற்கு:** யோவான் 13:34; 15:9; எபே. 5:2; 1 யோவான் 4:9-11
19	**ஏசாயா 58:8** - உங்கள் வெளிச்சம் எழும்பும் **தியானத்திற்கு:** சங். 18:28; ஏசாயா 9:2; 58:10; மத். 5:14-16
20	**தானியேல் 6:22** - பாதுகாப்பு **தியானத்திற்கு:** ஆதி. 24:40; யாத். 23:20; சங். 41:2
21	**லூக்கா 12:32** - கர்த்தர் உங்கள்மீது பிரியமாயிருக்கிறார் **தியானத்திற்கு:** சங். 41:11; ஏசாயா 62:4; எசே. 20:41; மத். 3:16,17
22	**1 சாமுவேல் 17:47** - யுத்தம் கர்த்தருடையது **தியானத்திற்கு:** உபா. 1:30; 20:4; 2 நாளா. 20:15, 29
23	**சங்கீதம் 121:7** - தீங்குக்கு விலக்கிக் காப்பார் **தியானத்திற்கு:** சங். 27:5; எரே. 17:17; செப். 3:15
24	**நெகேமியா 13:2** - சாபம் ஆசீர்வாதமாக மாறும் **தியானத்திற்கு:** ஆதி. 50:20; உபா. 23:5; சக. 8:13
25	**ஏசாயா 25:8** - தேவன் நம் கண்ணீரைத் துடைப்பார் **தியானத்திற்கு:** சங். 56:8; ஏசாயா 38:5; வெளி. 21:4
26	**நீதிமொழிகள் 2:8** - தேவன் பரிசுத்தவான்களைக் காப்பாற்றுகிறார் **தியானத்திற்கு:** 1 சாமு. 2:9; சங். 37:28; 97:10; 1 தெச. 5:23
27	**நீதிமொழிகள் 1:33** - கர்த்தருக்கு செவிகொடுங்கள் **தியானத்திற்கு:** நீதி. 8:34; லூக்கா 6:27; யோவான் 10:27
28	**ஆதியாகமம் 13:16** - கர்த்தர் உங்களைப் பெருகப்பண்ணுவார் **தியானத்திற்கு:** ஆதி. 16:10; உபா. 30:5; எசே. 36:37; எபி. 6:14
29	**லூக்கா 1:45** - பாக்கியவதி **தியானத்திற்கு:** ஆதி. 30:13; நீதி. 31:28,29; லூக்கா 1:48
30	**1 இராஜாக்கள் 3:13** - கர்த்தர் ஐசுவரியம் தருவார் **தியானத்திற்கு:** ஆதி. 26:12,13; 2 நாளா. 1:11,12; 9:22; நீதி. 10:22
31	**எஸ்றா 7:6** - கர்த்தருடைய கரம் **தியானத்திற்கு:** 1 நாளா. 4:10; எஸ்றா 7:28; நெகே. 2:18; சங். 139:5

இன்றைய ஆசீர்வாதத்திற்காக
தினகரன் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை
விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்

WWW.JESUSCALLS.ORG/TN/DPV
JESUS CALLS
SUBSCRIBE TO JESUSCALLS

ஊழியத்தில் என் அன்பு பங்காளரே,

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருமையான நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

"கர்த்தர் எருசலேமைக் கட்டுகிறார்; துரத்துண்ட இஸ்ரவேலரைக் கூட்டிச்சேர்க்கிறார்" (சங்கீதம் 147:2)

எவ்வளவு ஆறுதலான வாக்குத்தத்தம்! நம் தேவன் இப்போதும் வாழ்க்கையினை சீர்ப்படுத்துகிறார்; இடிந்து போனவற்றை திரும்ப கட்டுகிறார்; அலைந்துதிரிகிறவர்களை தம் கிருபையினால் கூட்டிச்சேர்க்கிறார். இந்த ஊழியத்தின் வாயிலாக மறுரூபமாகும் ஒவ்வொரு



உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்...

வாழ்க்கையும் அவரது உண்மைக்கும், அந்த அற்புதத்தில் ஒரு பகுதியாக விளங்கும் உங்கள் பங்களிப்புக்கும் சாட்சியாக விளங்கும்.

உங்கள் பங்களிப்பின் செயல்பாடு

கடந்த சில வாரங்களாக நடந்த ஒவ்வொரு ஆசீர்வாத கூட்டத்தையும் கர்த்தர் தம் உண்மைக்கு மகிமையான சாட்சியாக மாற்றினார்.

ஜூன் 21ம் தேதி, சென்னை குரோம்பேட்டையில் புதுவாழ்வு ஜெம்ஸ் ஆலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆசீர்வாத கூட்டத்தில் ஏறக்குறைய 1,000 பேர் கலந்து கொண்டனர். வாழ்க்கையை மாற்றும் வார்த்தையை சாமுவேல் தினகரன் பகிர்ந்துகொண்டார். அடுத்த ஞாயிறு (ஜூன் 28) சென்னை Dr. டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரத்தில் நடைபெற்ற ஆசீர்வாத கூட்டத்தில் ஏறக்குறைய 1,500 பேர் கலந்துகொண்டனர். அதில் தேவ வார்த்தையை அறிவித்து ஊழியம் செய்யும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது. அநேகர், தேவன் அருளிய சுகத்தையும், விடுதலையையும், தீர்க்கதரிசன தைரியத்தையும் பெற்று அனுபவித்தனர். ஜூலை 5ம் தேதி, சென்னை அண்ணா நகர் ஜெப கோபுரத்தின் 12வது ஆண்டு விழா ஆசீர்வாத கூட்டம் நடைபெற்றது. தேவனுடைய உண்மையும், ஜெபங்களுக்கு பதில் கிடைத்த சாட்சிகளும் எங்கள் உள்ளத்தை ஸ்தோத்திரத்தினால் நிறைத்தன.

ஜூலை 11ம் தேதி பெதஸ்தா ஆசீர்வாத கூட்டத்தில் ஆண்டவர் தொடர்ந்து வல்லமையாக அசைவாடினார். இந்தியா முழுவதிலுமிருந்து 6,000க்கும் மேற்பட்டோர் தேவனின் சமுகத்தையும் அற்புதங்களைச் செய்யும் வல்லமையையும் அனுபவிக்க கூடி வந்திருந்தனர்.

கோயம்புத்தூர், அவினாசியில் அமைந்துள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் ஜூலை 12ம் தேதி சாமுவேல் தினகரன் தேவ வார்த்தையை பகிர்ந்து கொண்டார். கூடி வந்திருந்த அனைவருக்கும் அது பெலனையும் தைரியத்தையும் அளித்தது. அதே நாளில் கோயம்புத்தூர் கர்மேல் ஜெப கோபுரத்தின் 30வது ஆண்டுவிழாவில் நான் ஊழியம் செய்தேன். அங்கும் தேவ சமுகம் வல்லமையாக அசைவாடி, கூடி வந்திருந்தோருக்கு பெருத்த ஆசீர்வாதத்தை அளித்தது.

இந்த ஆசீர்வாத கூட்டங்கள் அனைத்திலும் ஆண்டவர் தம் கிருபையையும் வல்லமையையும் எங்கள் வாயிலாக வெளிப்படுத்தினார். அவர் உரைத்த ஒவ்வொரு தீர்க்கதரிசன வார்த்தைக்காகவும், எழுப்பிய ஒவ்வொரு சாட்சிக்காகவும், செய்த ஒவ்வொரு அற்புதத்திற்காகவும் அவரை துதிக்கிறோம். குடும்பங்கள் இணைக்கப்பட்டன; வியாதியாயிருந்தவர்கள் குணப்படுத்தப்பட்டனர்; தம்பதியர் குழந்தை பாக்கியம் பெற்று மகிழ்ச்சியடைந்தனர்; முடியாது என்று காணப்பட்ட விண்ணப்பங்களுக்குப் பதில் கிடைத்தது; கூட்டம் நிறைவுற்றதும், அநேகர் புதிய விசுவாசமும் நம்பிக்கையும் பெற்று திரும்பினர்.

இந்தக் கூட்டங்கள் நம் டிஜிட்டல் மற்றும் சமூக ஊடக தளங்களில் தடையில்லாமல் நேரடியாக ஒளிபரப்பானதற்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறோம். கணக்கற்ற மக்கள் இணையவழியில் இணைந்து தேவனுடைய

ஆசீர்வாதங்களைப் பெற்றனர்.

ஊழியத்தின் வாயிலாக கட்டியெழுப்பப்படும் வாழ்க்கை

தேவ கிருபையினால் ஊழியம் தினமும் கணக்கற்றோர் வாழ்க்கையில் நம்பிக்கையை அளித்து வருகிறது. கடந்த மாதம் மட்டும் ஏறக்குறைய 1.4 லட்சம் பேருக்கு ஜெப கோபுரங்களில் ஜெப உதவி வழங்கப்பட்டுள்ளது. 24X7 தொலைபேசி ஜெப உதவி எண்ணில் 3.53 லட்சம் பேருக்கு ஊழியம் செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட பிரார்த்தனை சேவை (Dial-A-Prayer) வாயிலாக 32,500 பேர் ஆறுதலை பெற்றுக்கொண்டனர்.

64 வெளியிடக் கூட்டங்கள், எழுந்து கட்டுவோம் சிறப்பு ஆசீர்வாத கூட்டங்கள் மற்றும் மிஷன் நெட்வொர்க் கூட்டங்கள் வாயிலாக 1.2 லட்சம் பேர் தேவ செய்தியினாலும் ஜெபத்தினாலும் பெலப்படுத்தப்பட்டனர். வாலிபர் கூட்டங்கள் மற்றும் சிறுவர் ஆசீர்வாத (Kids Club) கூட்டங்கள் வாயிலாக ஊழியம் செய்யப்பட்ட 3,500 சிறுபிள்ளைகள் மற்றும் வாலிபருக்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறோம். ஏறத்தாழ 60,900 கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல்களுக்கு ஜெபத்துடன் பதில் அனுப்பப்பட்டுள்ளது.

> “உங்கள் பங்களிப்பினால் 3.5 கோடி பேர் தொடப்பட்டுள்ளனர்

நம் ஊழியத்தில் டிஜிட்டல் ஊழியத்தின் வாயிலாக தம் கிரியையை ஆண்டவர் தொடர்ந்து விரிவுபடுத்தி வருகிறார். இயேசு அழைக்கிறார் இணையதளம் மற்றும் மொபைல் செயலியின் வாயிலாக 1 லட்சத்துக்கும் அதிகமானோர் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்துவின் அன்பு 3.02 கோடி பேருக்கு நம் சமூக ஊடக தளங்கள் வாயிலாக சென்று சேர்ந்துள்ளது. இயேசு அழைக்கிறார் பத்திரிகைகள், மின்பத்திரிகைகள் (e-magazines) ஏறக்குறைய 3 லட்சம் பேரை சென்றடைந்துள்ளன. 45,570 இளம் பங்காளர்களை அவர்கள் பிறந்தநாளின்போதும், 14,880 குடும்ப ஆசீர்வாத திட்ட பங்காளர்களை திருமண நாளின்போதும் தொடர்பு கொண்டு ஜெபித்துள்ளோம்.

ஜெப கோபுர ஊழியம் : 43 ஆண்டுகளாக இடைவிடாத ஜெபம்

“இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும்” (2 நாளாகமம் 7:15)

இந்த ஆண்டு இயேசு அழைக்கிறார் ஜெப கோபுர ஊழியத்தின் 43வது ஆண்டை சந்தோஷமாக கொண்டாடுகிறோம். ஒரே ஒரு ஜெப கோபுரத்துடன் நாம் ஆரம்பித்தோம். இப்போது தேவ கிருபையினால் இந்தியா முழுவதும் 102 ஜெப கோபுரங்கள் அமைந்துள்ளன. நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து ஆண்டவரின் அன்பையும் ஆறுதலையும் இரக்கத்தையும் அனுபவிக்கிறார்கள்.

நமது அர்ப்பணிப்புள்ள ஜெப வீரர்கள், நாற்பதாண்டுகளுக்கு மேலாய், தேவனுடைய உதவியை நாடும் ஒவ்வொருவருக்காகவும் இடைவிடாமல் ஜெபிக்கிறார்கள். மக்கள் தங்கள் பாரங்களை ஆண்டவர் முன்பு ஊற்றும் போது, அவர் அற்புதங்கள், சுகம், சீராக்குதல், நம்பிக்கையினால் அவர்களுக்குப் பதில் அளிக்கிறார். கணக்கற்றோர் வாழ்க்கை, ஜெபத்தின் வல்லமையால் மறுரூபமாகியுள்ளது. தேவனுடைய மாறாத உண்மைக்காக அவரை துதிக்கிறோம்.

சென்னையைச் சேர்ந்த அபிநயா ஒரு சாட்சியை பகிர்ந்துகொள்கிறார்: என் அப்பா கண்ணில் நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டார். அதனால் கட்டி ஒன்றும் உருவானது. மருத்துவர்கள் அது புற்றுநோயாக இருக்கக் கூடும் என்று சந்தேகித்ததால் பயம் எங்களைப் பிடித்தது. உடன்தானே இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை தொடர்புகொண்டு ஜெபத்தில் ஆண்டவரை தேடினோம். தேவ கிருபையினால் மருத்துவர்கள் அது புற்றுநோய் அல்ல என்று உறுதிப்படுத்தினார்கள். சீக்கிரமே அந்தக் கட்டி முற்றிலுமாய் மறைந்துபோனது. ஆச்சரியமான இந்த அற்புதத்திற்காக தேவனை துதிக்கிறோம்.

ஜெப கோபுர ஊழியத்தின் வாயிலாக எழும்பும் நூற்றுக்கணக்காக சாட்சிகளுள் இதுவும் ஒன்று.

மக்கள் ஆறுதலை, சுகத்தை, தெய்வீக இடைப்படுதலை நாடி அதிக மதிகமான எண்ணிக்கையில் வருவதால் ஜெப கோபுரங்களை விரிவாக்க வேண்டிய தேவை வளர்ந்து கொண்டே வருகிறது. இந்தத் தேவையை சந்திப்பதற்கென ராஞ்சி ஜெப கோபுரம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. அதிகமானோர் தனிப்பட்ட ஜெப உதவி பெற்று, தேவ சமுகத்தையும் அற்புதங்களையும் அனுபவிக்கும்படி அவர்களை வரவேற்று அமரச்செய்ய விஸ்தாரமான இடத்தை ஏற்படுத்திவருகிறோம்.

ஆண்டவர் உங்களை வழிநடத்துவாரானால், நீங்களும் ஜெபத்துடன் இந்தத் தரிசனத்தை தாங்கும்படி உங்களை அழைக்கிறேன். ராஞ்சி ஜெப கோபுர புதுப்பித்தல் பணியைக் குறித்தும் நீங்கள் அதில் எப்படி பங்களிக்கலாம் என்ற விவரத்தையும் இந்த இதழின் 12ம் பக்கத்தில் காணலாம்.

பிரார்த்தனை கலாசாலை: ஜெபம் மற்றும் தீர்க்கதரிசன வல்லமை பயிற்சி படிப்பின் ஐந்தாம் அணி தொடங்கியது

“பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்” (எபேசியர் 4:12)

ஜெபம் மற்றும் தீர்க்கதரிசன வல்லமை பயிற்சி படிப்பின் 5வது அணி ஜூன் 22ம் தேதி இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டு தேவ கிருபையினால் சிறப்பாக நடந்து வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு பகிர்ந்துகொள்கிறோம். ஆறு மாத படிப்பின், முதல் நான்கு அணிகளில் பயிற்சி பெற்ற

300க்கும் மேற்பட்ட விசுவாசிகள் வெற்றிகரமாக முடித்துள்ளனர். இந்த 5வது அணியில் 190 பேர், தேவ வார்த்தையிலும் ஜெபம், தீர்க்கதரிசன ஊழியத்திலும் தங்களை ஊக்கமாக ஆயத்தப்படுத்தி வருகிறார்கள். இந்தப் படிப்பை முடித்த அநேகர் இப்போது இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் வாயிலாக உண்மையாய் ஆண்டவருக்கு ஊழியம் செய்து வருகிறார்கள்; தேவையிலுள்ளோருக்கு ஜெபத்தின் வாயிலாக ஊழியம் செய்கிறார்கள்.

மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக விளங்கும்படி ஆண்டவர் உங்கள் இருதயத்தில் ஏவினாரானால் ஜெபம் மற்றும் தீர்க்கதரிசன வல்லமை பயிற்சியின் அடுத்த அணியில் இணைந்துகொள்ளுமாறு உங்களை அழைக்கிறேன். prayeracademy@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்புகொள்ளுங்கள். மேலும் விவரங்களை 6380752257 அல்லது 9940181188 என்ற எண்களில் தொடர்புகொண்டு தெரிந்துகொள்ளலாம்.

ஆண்டவர், உங்களை தம் ராஜ்யத்திற்கென பலத்த வீரராக எழுப்பி, தம் மகிமைக்கென வல்லமையாக பயன்படுத்துவாராக.

வேலை ஆசீர்வாத திட்டம் : உங்கள் வேலைக்காக தேவனை நம்புங்கள்

"எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக; எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்; ஆம், எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்" (சங்கீதம் 90:17)

இதை வாசிக்கும் நீங்கள் ஒருவேளை, வேலைக்காக, பதவி உயர்வுக்காக, வசதியான பணியிட மாற்றத்திற்காக, வேலையில் தேவனுடைய வழிகாட்டுதலுக்காக ஜெபித்துக்கொண்டிருக்கலாம். அப்படியானால், தைரிய மாயிருங்கள். நம் தேவன் உண்மையுள்ளவர். உங்கள் கைகளின் பிரயாசத்தை அவர் வாய்க்கப்பண்ணுவார்.

ஆகஸ்ட் 17ம் தேதி வேலை ஆசீர்வாத திட்டம் ஏழாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இதில் 50,384 மேற்பட்டோர் பங்காளராக இணைந்திருக்கிறார் கள். இத்தனை ஆண்டுகளில் தேவன் எழுப்பிய அநேக சாட்சிகளுக்காக அவரை ஸ்தோத்திரிக்கிறோம். வேலை ஆசீர்வாத திட்ட பங்காளர்களின் விசுவாசமுள்ள, தியாக மான காணிக்கையை, புதிய வாசல்களை திறந்தும், பதவி உயர்வுகளை அருளியும், வாய்ப்புகளை சீராக்கி யும், தொழில் வாழ்க்கையில் அற்புதங்களைச் செய்தும் ஆண்டவர் கனப்படுத்தியுள்ளார்.

தன் மகனை வேலை ஆசீர்வாத திட்டத்தில் இணைத்த ஜான்ஸி, அவர் வாழ்க்கையில் ஆண்டவர் ஏற்படுத்திய திருப்பத்தை சந்தோஷமாக பகிர்ந்துகொண் டார். 10 ஆண்டுகள் அரசுவேலைக்காக முயற்சி வந்த அவருக்கு, அரசு வேலைக்கான தேர்வில் வெற்றி பெற ஆண்டவர் உதவி செய்து வாசலை திறந்தார். அவரது மகன் இப்போது மத்திய அரசில் பணியாற்றி வருகிறார்.

நீங்களும் வேலையில் திருப்பத்திற்காக வாஞ்சிப்பீர் களென்றால் நாங்கள் உங்களை ஜெபித்து தாங்குகிறோம். www.jesuscalls.org என்ற இணைப்பின் வாயிலாக நீங்களும் வேலை ஆசீர்வாத திட்டத்தில் இணைந்து கொள்ளலாம்.

தம்பதியர் எஸ்தர் ஜெபக் குழு

"உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்"

(மத்தேயு 18:19)

ஆகஸ்ட் 21, என் அன்பு அம்மா ஸ்டெல்லா தினகரன் தன் இருதயத்தை ஆண்டவருக்கு அளித்து, அவரது ஊழியத்துக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்த நாளாகும். ஆகவே, அது அவர்களுக்கு விசேஷித்த நாள். அப்போதிருந்து தேவன் அவர்களை வல்லமையாக, குறிப்பாக பெண்கள் மத்தியிலான ஊழியத்தில் பயன் படுத்தி வருகிறார். ஆண்டவரால் வழிநடத்தப்பட்டபடி, கணவனும் மனைவியும் இணைந்து ஒருமித்து தேவனை தேடவேண்டும் என்று உற்சாகப்படுத்தும் தரிசனத்திற்கேற்ப, 2017 ஆகஸ்ட் 5 அன்று தம்பதியர் எஸ்தர் ஜெபக்குழுவை அவர்கள் தொடங்கினார்கள். கடந்த ஆண்டில் மாத்திரம் 60 குடும்பங்கள் புதிதாக தம்பதியர் எஸ்தர் ஜெபக்குழு ஊழியத்தில் இணைந்துள் ளன. தற்போது ஜெபிக்கும் இந்த ஐக்கியம் 210 தம்பதி யராக உயர்ந்துள்ளது. தம்பதியர் தொடர்ந்து இணைந்து ஆண்டவரை தேடுவதால், உறவுகள் சீர்ப்படுகின்றன; தெய்வீக திருப்பங்கள் நிகழ்கின்றன; அன்பு புதுப்பிக்கப் படுகிறது; வீடுகளில் தேவனின் பரிபூரண ஆசீர்வாதம் நிரப்புகிறது.

தம்பதியர் எஸ்தர் ஜெபக்குழுவில் நீங்களும் இணைய விரும்பினால் epg@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்புகொள்ளுங்கள்.

நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளுக்காக தயவாய் ஜெபித்திடுங்கள்

சிறப்பு ஆசீர்வாத கூட்டம்

- ஆகஸ்ட் 26 - சிறப்பு ஆசீர்வாத கூட்டம், கம்பன் கலையரங்கம், புதுச்சேரி

ஜெப கோபுர கூடுகைகள்

- ஆகஸ்ட் 1, 2 - அனைத்து ஜெப கோபுரங்களிலும் எழுந்து கட்டுவோம் கூட்டம்
- ஆகஸ்ட் 8 - ரூர்கேலா ஜெப கோபுரம் - சம்பல்பூர் மிஷன் நெட்வொர்க் கூட்டம்
- ஆகஸ்ட் 12 - அம்பிகாபூர் ஜெப கோபுரம் - Sitapur-ல் சிறப்பு ஆசீர்வாத கூட்டம்
- ஆகஸ்ட் 19 - Moosarambagh ஜெப கோபுரம் - Vanasthalipuramல் வெளியிடக் கூட்டம்
- ஆகஸ்ட் 26 - தேனி ஜெப கோபுரம் - ஆண்டிப்பட்டி யில் வெளியிடக் கூட்டம்

இவற்றுடன் இந்தியா முழுவதும் 102 இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்களிலும் இன்னும் பல வெளியிடக் கூட்டங்களும் சிறப்பு கூடுகைகளும் நடைபெறுகின்றன. இதுபோன்ற ஆசீர்வாத கூடுகைகளில் நீங்களும் கலந்துகொள்ள விரும்பினால், அருகிலிருக்கும் ஜெப கோபுரத்தை அணுகி உங்கள் பகுதியில் நடைபெறும் கூட்டம் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ளலாம்.

ஆகஸ்ட் மாதத்தில் இணையவழி கூட்டங்கள்

இணையவழி பிரார்த்தனை திருவிழா:

- ஆகஸ்ட் 15 (சனி) பகல் 11 மணி - ஆங்கிலம் மற்றும் ஹிந்தி

  இயேசு அழைக்கிறார் யூடியூப் சேனலில் பாருங்கள்

  Zoom வாயிலாக பங்காளர் கூட்டங்கள்

- ஆகஸ்ட் 23 (சனி) - இளம் பங்காளர்கள் மற்றும் வாலிப ஆசீர்வாத திட்ட பங்காளர்களுக்கு மட்டும்

  மாலை 4:00 மணி - தமிழ்

  மாலை 6:00 மணி - ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம்

- ஆகஸ்ட் 30 (சனி) - இயேசு அழைக்கிறார் பங்காளர்கள்

  மாலை 4:00 மணி - தமிழ்

  மாலை 6:00 மணி - ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம்

இந்த Zoom சந்திப்புகளில் நானும் என் குடும்பத்தினரும் நேரலையில் உங்கள் ஜெப விண்ணப்பங்களுக்காக ஜெபிப்போம். இதில் இணைவதற்கான விவரங்கள் பங்காளர்களுக்கு மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்அப் வாயிலாக பகிரப்படும்.

ஆண்டவரின் அற்புதங்களை செய்யும் வல்லமையை விசுவாசித்து எதிர்பார்ப்புடன் இந்தச் சந்திப்புகளில் எங்களோடு இணையும்படி உங்களை அழைக்கிறேன்.

எங்களோடு இணைந்து பயணிப்பதற்காக உங்களுக்கு நன்றி

அன்பு பங்காளரே, உங்கள் உண்மையான பங்களிப்புக்காக மீண்டும் ஒருமுறை உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். நீங்கள் ஏறெடுக்கும் ஒவ்வொரு விண்ணப்பமும், அளிக்கும் ஒவ்வொரு காணிக்கையும், அன்பின் ஒவ்வொரு கிரியையும் நித்திய வித்தியாசத்தை ஏற்படுத்தும். இந்த ஊழியத்துடன் நீங்கள் நின்றதால் வாழ்க்கை மறுரூபமானவர்களை பரலோகத்தில் ஒருநாள் நீங்கள் சந்திப்பீர்கள். அது எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்! அவரது ராஜ்யத்திற்காக விதைக்கும் ஒவ்வொரு விதையும் நித்திய பலனை அளிக்கும் என்று அறிந்து, மகிழ்ச்சியுடன் இணைந்து ஆண்டவருக்கு ஊழியம் செய்வோம்.

ஆண்டவர்தாமே உங்கள் வாழ்க்கையின் எல்லா பகுதியையும் திரும்பவும் கட்டுவாராக; உங்கள் கைகளின் பிரயாசத்தை வாய்க்கப்பண்ணுவாராக; உங்கள் குடும்பத்திற்கென்று அவர் ஆயத்தம்பண்ணியிருக்கும் எல்லா ஆசீர்வாதத்தையும் கூட்டிச் சேர்ப்பாராக; தம் வாக்கின்படியும், அவரது உண்மைக்கு சாட்சியாக பிரகாசிக்கும்படியும் உங்கள் வாழ்க்கையை மாற்று வாராக (சங்கீதம் 147:2).

உங்களுக்காக ஜெபிக்கும் உங்கள் சகோதரன்,

Dr. பால் தினகரன்.

கோடிக்கணக்கான ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படும்படி
இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குவதற்கான வழிகள்

BANK TRANSFER:

Bank	Beneficiary	A/c No.	IFSC
IndusInd	JESUS CALLS	555444333222111	INDB0000167
ICICI	JESUS CALLS	000901056144	ICIC0000009

Please share your donation detail to us through Whatsapp to 98409 99923

Website: www.jesuscalls.org/donate
Jesus Calls Mobile app (available in Android & iOS)

EMO/CHEQUE /DD

- Write in favour of "JESUS CALLS"
- Can be sent by speed post to:
  Prayer Tower, 16, D.G.S. Dhinakaran Road,
  Chennai 600028.
- In person: At the prayer tower in your area

For donation related/partner plans/receipts related queries,
please call 044 23456677 or Whatsapp 98409 99923.
For 24x7 Prayer support, please call 8546999000

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்!

(பிலிப்பியர் 4:4)

சகோதரி ஸ்டெல்லா தினகரன்

"கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பது" என்பது, கர்த்தரால் அருளப்படுகிற பாக்கியம் நிறைந்த தெய்வீக வாழ்வாகும்.

"உலகம் முழுவதும் பொல்லாங்கனாகிய பிசாசுக்குள் கிடக்கிறது" (1 யோவான் 5:19).

"சத்துருவாகிய பிசாசு இருளில் இருக்கப்பண்ணுகிறான்" (சங்கீதம் 143:3)

"...உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் எவனை விழுங்கலாமோ? என்று வகைத்தேடி சுற்றித் திரிகிறான்" (1 பேதுரு 5:8)

இப்படிப்பட்ட இருள் நிறைந்த காரியங்களிலிருந்து, ஒளியாகிய இயேசுவுடனேகூட இணைந்து வாழ்வதே ஆசீர்வாதமான வாழ்வாகும். யோவான் சுவிசேஷம், 4ஆம் அதிகாரத்தில், சமாரியப் பெண் ஒருத்தியின் பாவம் நிறைந்த பரிதாபமானதும், குறைவுகள் நிறைந்ததுமான வாழ்வைப் பற்றி வாசிக்கிறோம். இந்த உலகின் ஆசை இச்சைகளினால் முழுவதுமாக நிரம்பி, எவ்வளவாய் இருள் நிறைந்த வாழ்வை அவள் வாழ்ந்துகொண்டிருந்தாள். ஆனால், தேவ கிருபையினால் அவள் இரட்சகராகிய இயேசுவண்டை வரவும், அவருடைய ஜீவனுள்ள வார்த்தைகள் மூலம் எவ்வளவு பிரகாசம் நிறைந்ததும், நற்சாட்சி நிறைந்ததுமான நற்கனிதரும் தெய்வீக வாழ்வை பெற்றுக்கொண்டாள் என்று வாசிக்கிறோம் அல்லவா?

நீதிமான்களோ ஆனந்த சந்தோஷமடைவார்கள்

(சங்கீதம் 68:3)

தேவ தூதர்கள் ஆண்டவராகிய இயேசுவின் பிறப்பின் மூலம் இரட்சிப்பின் நற்செய்தியைக் கூறி மேய்ப்பர்களுக்கு சந்தோஷத்தை உண்டாக்கினார்கள். ஆம், இயேசு "இரட்சகராக" இவ்வுலகில் பிறந்தார்.

இன்றைக்கு எத்தனை தனிப்பட்ட நபர்கள் அல்லது குடும்பங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்தும், அவர் சிலுவையில் ஆணிகளால் அடிக்கப்பட்டு சிந்திய இரத்தத்தினால் நமக்கு அருளியிருக்கிற இரட்சிப்பைப் பெற்றவர்களாய் கிடைக்கிற தெய்வீக சந்தோஷத்தினால் நிரம்பியிருக்கிறீர்கள்?

ஆண்டவராகிய இயேசு, மனுஷ அவதாரத்தில் இந்த உலகில் வாழ்ந்தபொழுது, அவர் எரிகோ என்ற ஊரின் வழியாக ஒருமுறை சென்றார். அப்பொழுது ஆயக்காரருக்கு தலைவனாயிருந்தவனும், இயேசுவை அறியாதவனுமாயிருந்த சகேயு என்ற குள்ள மனுஷன், தானும், தன் குடும்பமும் எவ்வாறு இந்த தெய்வீக இரட்சிப்பையும், சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொண்டார்கள் என்று லூக்கா சுவிசேஷம் 19-ம் அதிகாரம் 1 முதல் 10 வரையுள்ள வசனங்களில் வாசிக்கிறோமல்லவா? அவன் உள்ளத்தில் எழுந்த வாஞ்சையினால் அவனால் அத்தகைய தெய்வீக வாழ்வை பெற்றுக்கொள்ள முடிந்தது.

இன்றைக்கு உங்களில் எத்தனைபேர் சகேயுவைப் போல் "கர்த்தரைக் காணவும், அவரைப்பற்றி அறிந்துகொள்ளவும் விரும்புகிறீர்கள்?" அப்படிப்பட்டவர்கள் உள்ளங்களிலேயும், அவர்களோடு சேர்ந்த குடும்பத்தினரின் உள்ளங்களிலும் இயேசு அருளும் தெய்வீக இரட்சிப்பும், அதினால் உண்டாகிய ஆனந்த சந்தோஷமும் பெருகி, அவர்கள் வாழ்வு கர்த்தருடைய ஆசீர்வாதத்தை இன்றும் கூட நிறைவாய் பெற்றுக்கொள்ள ஏதுண்டாகும்!

வாலிபப் பெண் ஒருவள் இவ்வுலகப் பிரகாரமான ஆசீர்வாதங்களை மட்டுமே நாடித்தேடி, கர்த்தரை அறியும் அறிவை கொஞ்சமும் பெற்றுக்கொள்ளாத பரிதாப நிலையில் இருந்தாள். இதினிமித்தம் எந்தவிதமான சந்தோஷமும் இல்லாதவளாய், எப்பொழுதும் குழம்பிப் போன சூழ்நிலையில் மனம் குமுறிக்கொண்டு, பற்பல பாடுகளினால், துன்பங்களினால் தன்னை வருத்திக் கொண்டிருந்தாள். இந்த நிலையில் அவளுடைய சிநேகிதி ஒருவள் தெய்வ பயம் நிறைந்தவளாக, கர்த்தரைப் பற்றிக் கொண்டு வாழ்ந்ததால் பெற்ற தெய்வீக சந்தோஷம் நிறைந்த வாழ்வை கவனித்தாள். அதினிமித்தம் அவள் வாழ்வில் அனுபவித்து வந்த மெய்யான தெய்வீக சந்தோஷம் நிறைந்த வாழ்வைக் கண்டு, தானும் அவளைப்போன்று தெய்வத்தை உண்மை மனதுடன் தேட ஆரம்பித்ததினிமித்தம், அதேவண்ணமாக தெய்வீக சந்தோஷத்தினால் நிரப்பப்பட்டு, கர்த்தர் அருளிய நிறைவான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டாள்.

அன்பானவர்களே, விசேஷமாக வாலிபப் பெண்களே, வேத புத்தகத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்ற பக்தர்களின் வாழ்வை வாசித்துப் பாருங்கள். அவர்கள் உண்மை மனதுடனும், கர்த்தரை மிகுந்த பயபக்தியுடனும் தேடினதினிமித்தம் பெற்ற ஆனந்த சந்தோஷம் நிறைந்த தெய்வீக வாழ்வை நீங்களும் பெற்றுக்கொள்ள உங்களை தாழ்த்தி கர்த்தருக்கென்று அர்ப்பணிப்பீர்களாக!

நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள்!
(ரோமர் 12:12)

சங்கீதம் 26:1-ல் தாவீது, ''...நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன். ஆகையால் நான் தள்ளாடுவதில்லை'' என்று எழுதியிருக்கிறான். சங்கீதம் 23:1-ல், ''கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார். நான் தாழ்ச்சியடைவதில்லை'' என்று தன் வாழ்வில் பெற்ற நிறைவான நன்மைகளை தெளிவாக எழுதியிருக்கிறான். சங்கீதம் 56:4,11-ல், ''தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன். மனுஷன் எனக்கு என்ன செய்வான்?'' என்று தைரிய மாகக் கூறுகிறான். அதன்படியே, அவன் எல்லாவற்றையும் இழந்து வெறுமையாக நிற்கவேண்டிய நிலைமையிலும், கர்த்தர்மேல் வைத்திருந்த முழு நம்பிக்கையினிமித்தம், 1 சாமுவேல் 30-ம் அதிகாரம், 19-ம் வசனத்தில் வாசிக்கிற படியே, ''ஒன்றும் குறைவுபடாமல் எல்லாவற்றையும் தாவீது திருப்பிக்கொண்டான்'' என்று பார்க்கிறோம். இதற் கெல்லாம் காரணம், தாவீது கர்த்தராகிய தேவன்மீது வைத்திருந்த பலத்த நம்பிக்கையேயன்றி வேறு எதுவுமே யில்லை.

சங்கீதம் 62:5-ல் அவன் கூறுவதென்ன? ''என் ஆத்துமாவே, தேவனை நோக்கி அமர்ந்திரு. நான் நம்புகிறது அவராலே வரும்''. நீதிமொழிகள் 28:25-ன் படியே, குறைவுபட்ட நிலையிலெல்லாம் அவன் கர்த்தர் மேலேயே தன் முழு நம்பிக்கையையும் வைத்திருந்த படியினால், கர்த்தரால் வரும் செழிப்பை அவன் வாழ்வில் நிறைவாய் பெற்றுக்கொண்டான். சங்கீதம் 23:6-ல், ''என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்'' என்று கூறினான். சாதாரண ஆடு மேய்ப்பனாயிருந்த தாவீது புகழ்பெற்ற இராஜாவாக எவ்வளவாய் கர்த்தரால் உயர்த்தப்பட்டான்!

நாகூம் 1:7-ன்படி, கர்த்தர் தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். வேத புத்தகத்திலே, அன்னாள் என்ற பெண்மணி குழந்தை இல்லாத வெறுமை நிலையில், தேவ சமுகத்திலே வந்து மனம் கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி தன் இருதயத்தை ஊற்றினாள். அதே அதிகாரம், 27-ம் வசனத்தில், ''இந்த பிள்ளைக்காக விண்ணப்பம் பண்ணினேன். கர்த்தர் என் விண்ணப்பத் தைக் கேட்டார்'' என்று கூறி கர்த்தரால் தயவாகக் கொடுக் கப்பட்ட மகன் சாமுவேலை, கர்த்தருக்கென்றே பிரதிஷ்டை பண்ணினாள். கர்த்தர் அவனை ஆசீர்வதித்து, ஒரு மாட்சிமை நிறைந்த தீர்க்கதரிசியாக மாற்றினாரல்லவா?

என் வாழ்விலும் திருமணமாகி சில வருடங்கள் குழந்தை பெறுவதில் வேதனையை அனுபவித்த நான், பின்பு கர்த்தரை நோக்கி இடைவிடாமல் மன்றாடியதின் விளைவாக, என் அருமை மகன் பால் தினகரனை கர்த்தர் கொடுத்து ஆசீர்வதித்தார். இன்று அருமை மகனை கர்த்தர் தமது ஊழியத்தில் தம் நாம மகிமைக்கென்று எவ்வளவு வல்லமையுள்ள ஊழியனாக உபயோகித்து வருகிறார். நாம் துன்பப்பட்ட நாட்களுக்கு சரியாக மகிழ்ச்சியாக்குகிற தேவன் நம் தேவன்!

இதை வாசிக்கிற நீங்களும்கூட, நம்பிக்கையற்ற நிலையில் கர்த்தரை உறுதியாகப் பற்றிக்கொண்டு, இடை விடாமல் அவருக்கு ஸ்தோத்திரபலி செலுத்திக் கொண்டே ஜெபியுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்கள் வாழ்விலும் நிறைவான சந்தோஷத்தை தரும் விதத்தில் உங்களை ஆசீர்வதித்து சாட்சியாக பிரகாசிக்கச் செய்வார்.

கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள்ளே வாசம் பண்ணுவார்
(கொலோசெயர் 1:27)

ஆம் பிரியமானவர்களே! இந்த உலகத்தின் பிள்ளை கள் உங்களை எப்பொழுதும் சூழ்ந்துகொண்டிருக்கிற படியால், நீங்கள் ஒருவேளை வாழ்வில் சமாதானமின்றி கண்ணீரில் வாழ்ந்துகொண்டிருக்கலாம். ஆனால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை பெற்றும், தேவ மகிமையை அடைவோம் என்கிற நம்பிக்கையினாலும் நாம் மேன்மை பாராட்டுகிற கிருபையைப் பெறலாம். கர்த்தர்மேல் வைத்திருக்கிற நம்பிக்கையினால் உண்டாகும் தைரியத் தின்படி நாம் மேன்மை பாராட்டுகிறோம். பரலோகத்தி லிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே நிறைந்து இயேசு கிறிஸ்து வெளிப்படும் பொழுது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ள வர்களாயிருங்கள்(1பேதுரு1:12,13). அன்பானவர்களே, நாம் கடைசி நாட்களில் வந்திருக்கிறோம்! நாம் தனித்தனி யேயும், குடும்பம் குடும்பமாகவும் பயபக்தியோடும், பரிசுத்த வாழ்வோடும் கர்த்தருக்குப் பிரியமான வழிகளில் வாழ்கிறோமா? உங்கள் வாழ்வின் நிலைமையை நீங்களே சற்று ஆராய்ந்து பாருங்கள். இந்த உலகம், மாம்சம், பிசாசுக்கு அடிமைப்பட்டு இவ்வுலகத்தின் ஆசாபாசங்களை நாடித் தேடி இருள் நிறைந்த மார்க்கத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? அல்லது ஆண்டவராகிய இயேசுவின் சீஷரும், அவரோடிருந்தவர்களும் பெற்றுக் கொண்ட தெய்வீக ஆவியினால் நிறைந்தவர்களாகி, கர்த்தருக்கென்று நற்கனிகொடுக்கிற தெய்வீக வாழ்வை வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? நம் ஆண்டவர் இயேசுவே நமக்கெல்லாம் முன்மாதிரியாயிருக்கும் படிக்கு, அப்போஸ்தலர் 10:38-ல், தேவன் அருளிய பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் நிறைந்து அநேக ருக்கு ஆசீர்வாதமாக வாழ்ந்ததுபோன்றும், அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் அவரையே அண்டிக்கொண்டிருந்த அவருடைய சீஷர்கள் பெற்றதுபோன்றும் நீங்களும் இத்தகைய பரிசுத்த ஆவியின் வல்லமையினால்

நிறைந்தவர்களாக கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடும், ஆவியோடும், உண்மையோடும் அநேகரை தீமையி னின்று திருப்புகிறவர்களாக கர்த்தரை மகிமைப்படுத்தி வாழ்ந்து வருகிறீர்களா? பரம பிதாவை நோக்கி தனித்தனியேயும், குடும்பம் குடும்பமாகவும் பரிசுத்த ஆவியின் நிறைவிற்காக கருத்தாக வேண்டிக்கொண்டு பரிபூரண ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளுங்கள். கர்த்தரு டைய வாக்கின்படியே, ''கேட்கிற ஒவ்வொருவரும் நிச்சயம் பெற்றுக்கொள்வீர்கள்'' (லூக்கா 11:13).

எங்கள் குடும்பத்தின் தலைவராயிருந்த சகோதரர் தினகரன் அவர்களைப் பின்பற்றி, இத்தகைய தெய்வீக ஆவியின் நிறைவால் இன்றுவரை குடும்பமாக எங்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் நாம மகிமைக்காக எவ்வள வாய் ஆசீர்வாதமாக வழிநடத்தி வருகிறார். அதேவண்ண மாக நீங்களும், உங்கள் குடும்பமுமாக கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, அவர் அருளும் ஆவிக்குரிய சந்தோஷத் தினால் நிறைந்து, எழும்பிப் பிரகாசிக்க உங்களை அர்ப்ப ணித்து, ஆவியின் நிறைவினால் சம்பூரண ஆசீர்வாதம் பெற்று கர்த்தருடைய நாம மகிமைக்கென்று எழும்பிப் பிரகாசியுங்கள்.

கர்த்தர் என்னை திடப்படுத்தி, ஆறுதல்படுத்தினார்

24.06.2026 அன்று நான் ஜே.சி. ஹவுஸ் ஜெப கோபுரத்திற்கு வந்தபோது, சகோதரி கிருஸ்டி அவர்கள் எனக்காக ஜெபித்தார்கள். அப்பொழுது அவர்கள், ''நீங்கள் எஸ்தர் ஜெபக்குழு நடத்துகிறீர்களா?'' என்று கேட்டார்கள். நான் நடத்துகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர்கள், ''சகோதரி ஜெயராணி அவர்கள் உங்களை தொடர்புகொண்டு, எஸ்தர் ஜெபக்குழுவை எப்படி நடத்த வேண்டும் என்று ஆலோசனை கொடுத்து உங்களை வழிநடத்துவார்கள்'' என்று சொன்னார்கள். அன்று மாலையே, சகோதரி ஜெயராணி அவர்கள் என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு, ''அன்பு தாயார் ஸ்டெல்லா தினகரன் அவர்களுக்கு கர்த்தர் கொடுத்த தரிசனம் தான் இந்த எஸ்தர் ஜெபக்குழு ஊழியம். தன்னுடைய மகள் ஏஞ்சலை கார் விபத்தில் இழந்து, மிகுந்த வேதனையோடு இருந்த வேளையில், 31.03.1988 அன்று கர்த்தர் எஸ்தர் ஜெபக்குழு ஊழியத்தை அவர்களுக்கு கொடுத்தார். இன்றைக்கு நான்கு விதங்களில் இக்குழுவை நடத்தி வருகிறார்கள்'' என்று விரிவாகக் கூறினார்கள். அப்பொழுது நான் மிகுந்த சந்தோஷத்தோடு, ''நானும் என்னுடைய 17 வயது மகனை இழந்து ஒரு வருடமாகிறது; என்னை போன்றோரின் கண்ணீரைத் துடைப்பதற்காகவே கர்த்தர் இந்த எஸ்தர் ஜெபக்குழுவை ஏற்படுத்தியிருக்கிறார்; எனக்கு மிகவும் ஆறுதலாக இருக்கிறது. இப்படிப்பட்ட வழிநடத்துதல் இல்லையென்றால், இன்றைய தினம் நான் கண்ணீரோடும், துக்கத்தோடும் தான் துயரத்தில் ஆழ்ந்திருப்பேன்'' என்றேன்.

மேலும், சகோதரி ஜெயராணி அவர்கள் எங்கள் இல்லத்திற்கு வந்து இக்குழுவினை நடத்தினார்கள். அதினிமித்தம் கர்த்தர் என்னை திடப்படுத்தி, ஆறுதல்படுத்தினார். மட்டுமல்ல, இம்மாதம் கொடுக்கப்பட்ட ஜெபக்குறிப்புகளில் 4, 9, 16-வது ஜெபக்குறிப்புகள் எனக்கே உரியதாக இருந்தன. இப்படியாக எங்களை தமது அன்பினால் வழிநடத்திய ஆண்டவருக்கும், ஸ்டெல்லா அம்மா அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை ஏறெடுக்கிறேன். - சகோதரி ***பியூலா ரேகா,*** *சென்னை.*

"உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும்" (சங்கீதம் 18:35)

வாலிப வயதினரின் உயர்வுக்காகவும் அவர்களை மேம்படுத்தவும் சிறப்பு ஜெப முயற்சியாக வாலிப ஆசீர்வாத திட்டத்தை அறிமுகம் செய்கிறோம்.

வாலிப ஆசீர்வாத திட்டத்தில் பங்களிப்பதின் வாயிலாக, ஆயிரக்கணக்கான வாலிப ஆண்களையும் பெண்களையும் சந்திக்கவும், பல்வேறு ஊழிய முயற்சிகள் மற்றும் செயல்பாடுகள் வாயிலாக அவர்களை வாழ்வை மறுரூபமாக்கவும் நீங்கள் எங்களுக்கு உதவுகிறீர்கள். அப்படிச் செய்வதின் வாயிலாக, நீங்கள் வாழ்வின் அழுத்தங்கள், நிச்சயமின்மையிலிருந்து தேவனின் அன்பான பராமரிப்பு, வழிகாட்டுதல், தெய்வீக நோக்கத்திற்குள் அடியெடுத்து வைப்பீர்கள். ஊக்கமான ஜெபங்கள், தேவனுடைய கிருபை புதிய வாசல்களை திறக்கும்; உங்களை ஏற்ற வாய்ப்புகளுக்குள் வழிநடத்தும்; தேவன் உங்களுக்கென்று ஆயத்தப்படுத்தியுள்ள எதிர் காலத்துக்குள் உங்களைக் கொண்டு சேர்க்கும்.

எதிர்பார்ப்புக்கு மேலான தேவ பதில்

பி.டெக். படிப்பை முடித்த பிறகு, பொருளாதார நெருக்கடியையும் நிச்சயமற்ற எதிர்காலத்தையும் சந்திக்க நேர்ந்தது. ஒவ்வொரு நேர்முகத் தேர்வையும் நம்பிக்கையோடு சந்தித்தாலும், தாமதங்கள் அதைரியப்படச் செய்தன. எனக்காக ஜெபிக்கும்படி Dr. பால் தினகரனுக்கு எழுதினேன். அங்கிள் என் தேர்வுகளுக்காகவும் நேர்முகத் தேர்வுகளுக்காகவும் ஊக்கமாக ஜெபித்தார். தேவ வார்த்தையினால் உற்சாகப்படுத்தினார். அவை என் விசுவாசத்தை புதுப்பித்தன. கர்த்தர் என் எதிர்பார்ப்புக்கும் மேலாக எனக்கு பதிலளித்தார். ஹைதராபாத்தில் பெயர்பெற்ற Bharat Electronics Limited (BEL) நிறுவனத்தில் அரசு பணி வழங்கி ஆசீர்வதித்தார். தேவனுடைய மாறாத உண்மைக்காக ஸ்தோத்திரிப்பதோடு, அன்பான ஜெப உதவிக்காக நன்றியோடு இருக்கிறேன்.

- G. லிக்கில் குமார்.

வாலிப ஆசீர்வாத திட்டம் எவ்வாறு வழங்கும்?

உங்கள் எதிர்காலத்துக்காக தினசரி ஜெபம்

அனுதினமும் உங்கள் பெயரும் தனிப்பட்ட கவலைகளும் ஜெப கோபுரங்களில் அர்ப்பணிப்புள்ள ஜெப வீரர்களால் தேவனுக்கு முன்பாக ஏறெடுக்கப்படும். **ஆவிக்குரிய வாழ்க்கை, உயர் கல்வி, வேலை மற்றும் பொருளாதாரம், உடல்நலம், திருமணம் மற்றும் குடும்ப வாழ்வு** ஆகிய வாழ்வின் ஐந்து பகுதிகளுக்காக சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.

வாலிப ஆசீர்வாத திட்ட பங்காளர் பெறுபவை:

- உங்கள் விசேஷித்த ஜெப விண்ணப்பங்களுக்கு ஜெப கோபுரங்கள் வாயிலாக தனிப்பட்ட ஜெப உதவி
- உங்கள் பிறந்தநாளின்போது தொலைபேசி வாயிலாக சிறப்பு ஜெபம்
- Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினரின் ஜெப உதவி
- உங்கள் பகுதி அருகே நடைபெறும் வாலிபர் கூட்டங்கள் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிக்கு அழைப்பு
- அருகிலுள்ள ஜெப கோபுரத்தில் இசை, ஆராதனை ஏனைய தாலந்துகள் வாயிலாக ஊழியம் செய்ய வாய்ப்பு

* ஊழியத்திற்கு ரூ.20,000/-க்கு மேலாக கொடுத்து ஆதரவு தருவோருக்கு தினகரன் குடும்பத்தினர் கையெழுத்திட்ட வேதாகமம் வழங்கப்படும்.

* ஊழியத்திற்கு ரூ.30,000/- மேல் அளித்து தாங்குவோரை, நன்றியின் அடையாளமாக இரண்டு பகல் / ஒரு இரவு பெதஸ்தா ஜெப மையத்தில் தங்குமாறு அழைக்க விரும்புகிறோம். பெதஸ்தா ஜெப நகரத்தின் வசதிகளுடன், விருந்தினர் இல்லத்தில் ஒரு அறையில் தங்குவதுடன், காருண்யா பல்கலைக்கழக வளாகம் மற்றும் ஆய்வகங்களைப் பார்க்கவும் முடியும்.

வாலிப ஆசீர்வாத திட்டத்தில் இன்றே இணைந்திடுங்கள். வாலிபருக்கு ஆசீர்வாதமாக விளங்கிடுங்கள். தேவனின் உச்சிதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒரே முறையாக ரூ.10,000/- அல்லது மாதந்தோறும் ரூ.200/- நன்கொடை அளிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இணையதளம்: www.jesuscalls.org/ybp மின்னஞ்சல்: ybp@jesuscalls.org
அழைக்க / வாட்ஸ்அப்: +91 98409 00477 சாட்சிக்கு: testimony@jesuscalls.org

அறிவதற்கு முன்பே தெரிந்து கொள்ளப்பட்டீர்கள்

சாமுவேல் தினகரன்
samuel@jesuscalls.org SAMUELDHINAKARAN

எனக்கு அன்பானவரே, இம்மாதத்தில் தேவன் ஓர் அற்புதமான வாக்குத்தத்தத்தை உங்கள் வாழ்வில் நிறைவேற்ற விரும்புகிறார்.

வேதத்தில், "**தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்த முள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே... தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்**" (எபேசியர் 1:4,6) என்று வாசிக்கிறோம்.

இதைக் குறித்து யோசித்துப் பாருங்கள்! நீங்கள் பிறப்பதற்கு முன்பே, தேவன் நீங்கள் அவரது மகனாகும்படி, மகளாகும்படி, தாம் உங்களுக்குத் தகப்பனாய் பாதையில் உங்களோடு நடந்து வருவதற்கு விரும்பியிருக்கிறார்; தெரிந்துகொண்டிருக்கிறார்.

தேவனுடைய குமாரன் அல்லது குமாரத்தியாதல் என்பது எதைக் குறிக்கிறது?

உங்களுக்காகவே தன்னை முழுவதுமாக தகப்பன் அர்ப்பணித்திருக்கிறார் என்று நினைத்துக்கொள்ளுங்கள். உங்கள் வாழ்வு செழிப்பதற்கான எல்லாவற்றையும் அவர் செய்வார்; அதே சமயத்தில், சரியானவை என்று அவர் அறிந்திருக்கும் வழிகளில் நீங்கள் நடக்கிறீர்களா என்பதை உறுதி செய்துகொள்வார்.

அவ்வண்ணமே, பரம தகப்பன், தமக்கு சமீபத்தில் நீங்கள் நடந்து வரும்படி உங்களை வழிநடத்துவார். அப்போது அவருக்கு முன்பாக நீங்கள் கறையற்றவராக இருப்பீர்கள். உங்களைக் காண்கிறவர்கள், "இவர் இயேசுவின் குமாரன் / குமாரத்தி என்பதை உண்மையில் பார்க்கிறேன். இயேசுவை இவரில் காண முடிகிறது" என்று கூறுவார்கள். உங்கள் வாழ்வில் தகப்பன் அப்படியே நேர்த்தியாகச் செயல்படுகிறார்.

தேவன், உங்களை தம் குமாரனாக / குமாரத்தியாக உருவாக்கும் மூன்று வழிகள்

தம் கிருபையினால் உங்களை மூடுகிறார்

"**அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது**"
(எபேசியர் 1:7)

எல்லோரும் தத்தளிக்கிறோம் என்பதே உண்மை. நாம் தவறுகள் செய்கிறோம். தோல்வியுறுகிறோம். சிலவேளைகளில் தேவனை விட்டு விலகியும் போய் விடுகிறோம். ஆனால், அவரது கிருபை நம் தோல்விகளைக் காட்டிலும் பெரியவை. தேவனுடைய பெரி

தான கிருபை உங்கள் வாழ்வை மூடும்; பாவக் குழியி லிருந்து உங்களை மீட்கும். எவ்வளவு அதிகமாய் நீங்கள் விலகி ஓடிப்போக முயற்சிப்பீர்களோ அவ்வளவு அதிகமாய் அவரது பெரிதான கிருபை உங்களைத் தொடரும். பாவத்தால் நீங்கள் விழுவதையோ, அழிந்துபோவதையோ அவர் ஒருக்காலும் விட மாட்டார். தம் பக்கமாய் உங்களை மறுபடியும் இழுத்துக்கொள்வார். தேவனுடைய குமாரனாக, குமாரத்தியாக இருப்பதில் மிகப்பெரிய ஆசீர்வாதம் இதுவாகும்.

ஆகவே, நீங்கள் தோல்வியுறும்போது, தேவனை விட்டு ஓடிப்போகாதீர்கள்; மாறாக, அவரிடம் ஓடி வாருங்கள். அவரது கிருபைக்காக ஸ்தோத்திரிப்ப தோடு, உங்கள் அடையாளம் எப்போதும் இயேசுவுக் குள் இருக்கிறது என்பதை மறந்துபோகாதீர்கள்.

தம் நோக்கத்தை வெளிப்படுத்துகிறார்

"அந்தக் கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப்பண்ணினார்" (எபேசியர் 1:8)

"நான் எந்தப் பாதையில் செல்வது? எதைப் படிப்பது? என் எதிர்காலத்தைக் குறித்து தேவனுடைய திட்டம் என்ன?" என்றே இன்றைய இளைஞர்கள் கேட்கின்றனர். அன்பானவர்களே, தேவன் அதை அறிந்திருக்கிறார். அவரது குமாரனாக / குமாரத்தியாக இருக்கும் உங்களை தாம் ஏற்படுத்திய பிரத்தியேக நோக்கத்தின்படி நடத்துவதாக அவர் வாக்குக்கொடுக் கிறார்.

சார்லஸ் தாமஸ் ஸ்டட் என்ற பெயர் பெற்ற மிஷனெரி இதற்கு நல்ல உதாரணமாவார். வெற்றிகர மான கிரிக்கெட் வீரர், செல்வம், அங்கீகாரம் என்று உலகம் தரக்கூடிய அனைத்தும் பெற்ற வாலிபனாக அவர் இருந்தார். ஆனாலும் தேவன் அவருடைய வாழ்க்கையைக் குறித்த தம் நோக்கத்தை வெளிப் படுத்தியபோது, ஸ்டட், சந்தோஷமாக எல்லாவற்றை யும் விட்டுவிட்டு கிறிஸ்துவின் அழைப்பை பின்பற்றி னார். எனினும், உலகம் முழுவதும் கணக்கற்றோரை ஆசீர்வதிக்கும்படி தேவன் அவரைப் பயன்படுத்தினார்.

அவ்வண்ணமே, உங்கள் வாழ்க்கையைக் குறித்து தாம் கொண்டிருக்கும் நோக்கத்தை தேவன் அறிந்தி ருக்கிறார். நாம் சரியான பாதையில்தான் சென்று கொண்டிருக்கிறோமோ என்று நீங்கள் திகைக்க வேண்டாம். அவர் உங்களை நடத்தும்போது, எந்த வேலைக்கென்று நீங்கள் படைக்கப்பட்டீர்கள் என்பதை கண்டுகொள்வீர்கள். நீங்கள் தேவனின் பரிபூரண சித்தத்தில் நடப்பதால் மகிழ்ச்சியையும், செழிப்பை யும், திடநம்பிக்கையையும் அந்தப் பாதையில் காண்பீர்கள்.

ஆகவே, முக்கியமான வாழ்க்கை முடிவுகளை எடுக்கும் முன்னர் ஜெபியுங்கள். தினமும் வேதத்தில் ஒரு பகுதியை வாசியுங்கள். "ஆண்டவரே, இன்று நீர் எதை எனக்குக் கற்றுக்கொடுக்கிறீர்?" என்று கேளுங் கள். அவரது வழிகாட்டுதலையும் வேளையையும் நம்புங்கள்.

உங்கள் குணத்தை மாற்றுகிறார்

"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதா னம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" (கலாத்தியர் 5:22,23)

தேவன், நீங்கள் செல்லுமிடத்தை மாத்திரம் மாற்று கிறவரல்ல; அவர் நீங்கள் யாராக உருவாகிறீர்கள் என்பதையும் மாற்றுகிறார். அவரது ஆவி உங்களுக் குள் கிரியை செய்யும்போது, உங்கள் சுபாவம் இயேசுவைப்போல் மாறுகிறது; அவரது சாயலாய், அன்பும், சந்தோஷமும், சமாதானமும், அன்பும், இச்சையடக்கமும் சாந்தமும் நிறைந்தவராய் உங் களை மாற்றுகிறது. உங்கள் சுபாவத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கண்டு நீங்களே ஆச்சரியப்படுவீர்கள். "நான் கோபமுள்ளவனா(ளா)ய் இருந்தேன்; தேவன்

என்னை அன்புள்ளவனா(ளா)க மாற்றியுள்ளார். என்னுடைய பொறாமையெல்லாம் போய்விட்டது. இப்போது நான் திருப்தியாகவும், சமாதானமாகவும் இருக்கிறேன்" என்று வியப்பீர்கள். இவையே தேவ னுடைய ஆவி உங்களுக்குள் பெருகுவதின் பலனா கும். உங்கள் வாழ்க்கையைப் பார்க்கும் மக்கள், பிதாவை உங்கள் வாயிலாக பார்க்க தொடங்கு வார்கள்.

ஆகவே, அன்பானவர்களே, "என் வாழ்க்கை இயேசுவை காண்பிக்கிறதா? என் நட்பு வட்டத்தில் இருப்பவர்கள் என்னில் கருணையை, சமாதானத்தை, இச்சையடக்கத்தை காண்கிறார்களா?" என்று உங்க ளுக்குள் கேட்டுக்கொள்ளுங்கள்.

நீங்கள் தகப்பனுடன் நெருங்கியிருக்கும்போது, இயேசு தெளிவாகக் காணப்படும் வரை தொடர்ந்து உங்கள் வாழ்வில் நேர்த்தியாக செயல்படுவார்.

தேவனுக்குப் பிரியமான பிள்ளையாக திடநம்பிக்கையாயிருங்கள்.

தொடர்ந்து நம்மை அவமரியாதை செய்து வருகிறவர்களை மன்னித்து பொறுமையாக இருக்க வேண்டுமா? அல்லது அவர்களுக்கு எதிராக செயல்படவேண்டுமா?

ஜோசப் கேட்கிறார்

அன்பானவர்களே, அனுதினமும் நாம் அதைரியப் படுத்தும், புண்படுத்தும், அவமரியாதை செய்யும் வார்த்தைகளை அனுபவித்திருப்போம். அப்படிப்பட்ட வார்த்தைகளை நம் நட்புவட்டத்தில் இருப்பவர்கள், வகுப்புத் தோழர், தோழியர், பள்ளியில் உள்ளவர்கள் பேசலாம். நம் குடும்பத்தினர், உறவினர், பக்கத்து வீட்டினர், உடன் வேலைசெய்பவர்கள், மேலாளர்கள், மேலதிகாரிகள், ஏன், நமக்கு மிகவும் நெருங்கிய அன்பானவர்கள் கூட பேசலாம். இந்த வார்த்தைகள் நம் இருதயத்தைப் புண்படுத்தும். வேதம், ''மனுஷனுடைய விவேகம் அவன் கோபத்தை அடக்கும்; குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு மகிமை'' (நீதிமொழிகள் 19:11) என்று கூறுகிறது. சிலவேளைகளில் ஞானத்தோடு பொறுமையாக பதில் அளிப்பது பலவீனமாக தோன்றா மல், பலமாக இருக்கும்.

வெவ்வேறு சூழ்நிலைகளை நாம் எவ்வாறு கையாள முடியும்?

நம் கல்லூரியிலோ, பள்ளியிலோ பலமுறை மற்றவர்கள் நம்மை அவமரியாதை செய்யலாம் அல்லது நம்மைக் குறித்து கேலி பேசலாம். நம்மை வெட்கப்படுத்த முயற்சிப் பார்கள். நம் பெயரைக் கெடுப்பது மட்டுமே அவர்கள் நோக்கமாக இருக்கும். நம்மை சங்கடப்படுத்த அவர்கள் எல்லாவற்றையும் செய்வார்கள். சிலவேளைகளில் அவர்கள் கடந்துசெல்லும் பாதையும் அதற்குக் காரண மாக அமையும். அவர்கள் தங்களைத் தாங்களே புண் படுத்திக்கொள்ளலாம் அல்லது நமக்கு விரோதமாக உள்ளான ஏதோ ஒரு நோக்கத்தை வைத்திருக்கலாம்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அவர்களிடமிருந்து விலகியிருக்கும்படியே நான் ஆலோசனை கூறுவேன். எந்த அளவுக்கு நாம் அவர்களோடு பழகுகிறோமோ அந்த அளவுக்கு நம்மை மரியாதைக் குறைவாக நடத்துவதற் கான வாய்ப்பை அளிக்கிறோம். நம் நட்புவட்டத்தில் உள்ளவர்களோடு, நம்மை நேசிப்பவர்களோடு, நம்மை புரிந்துகொள்கிறவர்களோடு நேரம் செலவழிப்பது சிறப்பாக இருக்கும். மரியாதைக் குறைவை தவிர்ப்பது, அந்தத் தருணத்தில் நாம் செய்யவேண்டியவை குறித்து கவனமாக இருக்க உதவி செய்யும். படிப்பில் கவனம் செலுத்துங்கள் அல்லது உண்மையாக உங்களை அறிந்திருப்பவர்களோடு நேரம் செலவிடுங்கள். அப்படிப் பட்டவர்களுக்கு அதிகாரம் கொடுக்காமல் இருக்கும் போது, காலப்போக்கில் அவர்கள் சோர்வடைந்துவிடு வார்கள்; மறந்துபோவார்கள்.

ஸ்டெல்லா ரமோலா *பதிலளிக்கிறார்*

நீங்கள் வெட்கத்தை அனுபவித்த இடத்தில் தேவன் உங்களுக்குப் புகழ்ச்சியையும் கனத்தையும் அளிப்பார்

நம் வீட்டில் இப்படி நடந்தால் நாம் என்ன செய்வோம் நெடுங்காலமாக நமக்குக் குழந்தை பிறக்காமலிருந்து நம் குடும்பத்தில் உள்ளவர்களோ, உறவினர்களோ புண்படுத்துவதுபோல் பேசினால், நமக்கு வாழ்க்கைத் துணையை கண்டுபிடிக்க முடியாமல் இருக்கும்போது குத்திக்காட்டிப் பேசினால், வேலையை இல்லாமல் பாடுபட்டுக்கொண்டிருக்கும்போது, வேலையை விட்டு நீக்கப்பட்டுவிட்டால் அல்லது நீங்கள் வேலையை விட்டுவிட்டால் என்று எல்லா சந்தர்ப்பங்களிலும் புண்படுத்தும் வார்த்தைகளைக் கேட்க வாய்ப்பிருக்கிறது. அவர்கள் உங்களிடம் ஏதோ தவறு இருப்பதுபோல் அல்லது நீங்கள் எதற்கும் பயன்படாததுபோல் பேசலாம். உங்கள் தோற்றத்தைக் குறித்து வேடிக்கையாய் பேசுவது உங்களைக் குறுகப்பண்ணலாம்.

அப்படிப்பட்ட சூழ்நிலைகளில், புன்னகையுடன், எல்லோருடனும் இனிமையாக நடந்துகொள்ள வேண்டும். உங்கள் இருதயத்தில் நீங்கள் எதன் வழியாக கடந்து சென்று கொண்டிருக்கிறீர்கள் என்பதையும், உங்கள் வாழ்க்கையில் எதன் வழியாகச் சென்று கொண்டிருக்கிறீர் என்பதையும் ஆண்டவர் அறிந்திருந்திருக்கிறார். ஒருவேளை, மிகப்பெரிய ஆசீர்வாதத்திற்காக அவர் உங்களை ஆயத்தம்பண்ணிக்கொண்டிருக்கலாம்; ஆகவே, நீங்கள் வெட்கத்தை அனுபவித்த இடத்தில் தேவன் உங்களுக்குப் புகழ்ச்சியையும் கனத்தையும் அளிக்கலாம். பொறுமையாயிருங்கள். இங்குமங்கும் ஓடி, உங்களைக் காத்துக்கொள்வதற்காக எல்லோரிடமும் சொல்லிக்கொண்டிருக்காதிருங்கள். தேவன் உங்களுக்காக யுத்தம்செய்வார். நீங்கள் சமாதானத்தோடிருப்பீர்கள்.

நீங்கள், ''என் தினசரி வாழ்க்கையை பாதிக்காதவரை மக்களின் வார்த்தைகளை நான் தவிர்க்கலாம். ஆனால், இவர்களுடனே நான் வேலை செய்வது எப்படி என் மேலதிகாரிக்கு நான் பதில் சொல்லியாக வேண்டும்; உன் உடன் பணியாளர்களுக்கு பதில் சொல்லியாகவேண்டும். அவர்கள் என்னை இப்படி நடத்தினால் அவர்களோடு இணைந்து எப்படி வேலை செய்யமுடியும்?'' என்று கேட்கலாம்.

உங்கள் அலுவலகத்தில் இப்படி நடந்தால் வேலையில் உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறப்பாக செயல்படுங்கள். நீங்கள் செய்யும் வேலையில் கவனம் செலுத்தி உங்களால் இயன்ற அளவு நன்றாக செய்யுங்கள். யாரைக் குறித்தும் வைராக்கியம் கொண்டிராதீர்கள். அவர்களை கீழே தள்ள முயற்சிக்காதீர்கள். யாரையும் பழிவாங்காதிருங்கள். உங்கள் வேலையில் கவனம் செலுத்துங்கள். உங்கள் உண்மைக்கு தேவன் பலன் அளிப்பார்; புகழ்ச்சியும் கனமும் வந்து சேரும்.

என் தோழி இளநிலை மருத்துவராக பணியாற்றினாள். அவளது திறமையையும் விசேஷித்தவண்ணம் வேலை செய்வதையும் கவனித்த தலைமை மருத்துவர் அவளைப் பயிற்றுவிக்கும்வண்ணம் பல நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும்போது அவளை உதவிக்கு வைத்துக்கொண்டார். எல்லா பணியாளர்கள், தாதியர், நோயாளிகளின் அன்பையும் அவள் பெற்றிருந்தாள். ஆனால் அந்த நிறுவனத்தின் இயக்குநருக்கு அப்படி நடப்பது பிடிக்கவில்லை. அவர், அவளை மரியாதைக் குறைவாக நடத்தவும், அவள் குணத்தை அழிக்கவும், எல்லோர் முன்பாகவும் அவளை வேடிக்கையாக்கவும் முயற்சி செய்தார். ஆனால் அவள் ஒருபோதும் அதைப் பொருட்படுத்தவில்லை. அது அவளை புண்படுத்திய போதிலும், அதை தன் வேலையில் அவள் காட்டவேயில்லை. அவள் உண்மையுடன் வேலை செய்து கொண்டே இருந்தாள். அதன் பலனாக தேவன் இன்னும் அநேக நோயாளிகளை அவளுக்குக் கொடுத்து அவள் சேவையை ஆசீர்வதித்தார். மூத்த மருத்துவர்கள் அங்கு இருந்தபோதிலும் மக்கள் அவளை விசாரிக்க ஆரம்பித்தனர். புண்படுத்தக்கூடிய சூழ்நிலைகளின் மத்தியில் தேவன் அவளை உயர்த்தினார். இப்போது அயல்தேசத்தில் பணி செய்யும் அவளை தேவன் சேவையில் பிரகாசிக்கப்பண்ணியிருக்கிறார். அவள் வாழ்க்கையை தேவன் நேர்த்தியாக்கி, அவளைப் பார்க்கும் அனைவரும் மகிழும்படி செய்திருக்கிறார்.

''**ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்**'' (நீதிமொழிகள் 16:7) என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

அந்த வார்த்தைகள் எதுவும் உங்களைத் தொடாது. நீங்கள் அவற்றை விட மிகவும் உயரத்தில் இருக்கிறீர்கள். அதுபோன்ற எந்த வார்த்தைகளும், புண்படுத்தும் சூழ்நிலைகளும் தொடக்கூடாதபடி மிகவும் உயர்ந்த இடத்தில் தேவன் உங்களை அமர்த்துவார். நீங்கள் மிகவும் பெரிய நோக்கத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். தொடர்ந்து நடவுங்கள்; வாழ்க்கையைத் தொடருங்கள். உங்கள் செய்கைகளை, வார்த்தைகளை, எண்ணங்களை பரிசுத்தமாகக் காத்துக்கொள்ளுங்கள். நீங்கள் வெட்கத்தை அனுபவித்த அதே இடத்தில் தேவன் உங்களை உயர்த்துவார். அன்பானவர்களே, மகிழ்ச்சியாயிருங்கள்.

ஜெபம் மற்றும் தீர்க்கதரிசன வல்லமை பயிற்சி

பரிசுத்த ஆவியின் பலம் பெற்று தலைமுறையை எழுப்புதல்

ஐந்தாவது அணி ஆரம்பம்

"கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்" **(அப்போஸ்தலர் 2:17)**

2026 ஜூன் 22ம் தேதி இந்த அணி ஆரம்பிக்கப்பட்டது. விசுவாசிகளை தேவ வார்த்தை, ஊக்கமான ஜெபம், தீர்க்கதரிசன ஊழியம், கிறிஸ்தவ நடைமுறை வாழ்க்கையில் பயிற்றுவிக்க ஏற்றதாய் ஜெபத்துடன் இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை கலாசாலை இந்த 300 மணி நேர சான்றிதழ் படிப்பை உருவாக்கியுள்ளது.

முதல் நான்கு அணிகளில் முந்நூறு பேர் இந்தப் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார்கள். ஐந்தாவது அணியில் 190 பேர் சேர்ந்துள்ளார்கள். பயிற்சி முடித்தவர்கள் அநேகர் இயேசு அழைக்கிறார் ஊழியம் வாயிலாக மக்களுக்காக ஜெபித்து தேவ அன்பை பகிர்ந்துகொள்கிறார்கள்.

ஆவிக்குரிய இப்பயிற்சி வளர்ந்து பெருகுவதற்காக தேவனை துதிக்கிறோம். இப்புதிய அணியில் பயிற்சி பெறும் ஒவ்வொரும் உண்மையான சீஷராக மறுரூபமாகவும், தீர்க்கதரிசன அபிஷேகம் பெறவும், தேவ அன்பினாலும் வல்லமையினாலும் அநேகருக்கு ஆசீர்வாதமாக விளங்கவும் ஜெபிப்போம்.

இயேசு அழைக்கிறார் பத்திரிகை ஊழியம்

தேவனுடைய குரலை ஒவ்வொரு இல்லத்திற்கும் கொண்டு செல்லுதல்

"எனது வீட்டுக் கடன் விண்ணப்பத்தை எல்லா வங்கிகளும் நிராகரித்தபோது, இயேசு அழைக்கிறார் பத்திரிகையில் இருந்த தேவனுடைய வாக்குத்தத்தத்தை உரிமையாக்கி, ஜெபக் கோபுரக் கட்டிடப் பணிக்காக மாதந்தோறும் காணிக்கை அளிக்க தீர்மானித்தேன். 10 நிமிடங்களில், என் வீட்டுக் கடனை வங்கி அங்கீகரித்தாக தகவல் வந்தது. அன்றிலிருந்து இன்று வரை கர்த்தர் எங்கள் குடும்பத்தை உண்மையுடன் ஆசீர்வதித்து வருகிறார்." - கேண்டி.

அன்பானவர்களே, கேண்டியின் விசுவாசத்தை ஒரே ஒரு வாக்குத்தத்தத்தைக் கொண்டு பெலப்படுத்தியதுபோன்று, தேவன் இயேசு அழைக்கிறார் பத்திரிகையின் வாயிலாக கணக்கற்ற மக்களோடு பேசி வருகிறார். இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்களுக்கு வருகிறவர்களுக்கு இந்தப் பத்திரிகை இலவசமாக கொடுக்கப்படுகிறது. மாதந்தோறும் இதை அச்சிட்டு விநியோகிக்க ஏறத்தாழ 25 லட்சம் ரூபாய் தேவையாயிருக்கிறது.

இந்தப் பத்திரிகை ஊழியத்தைத் தாங்குவதற்காக உங்கள் காணிக்கையில் ஒரு பகுதியை ஜெபத்துடன் கொடுப்பீர்களா? நீங்கள் கொடுக்கும்போது, "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்" (லூக்கா 6:38) என்ற வாக்குப்படி ஆண்டவர் உங்கள் உண்மைக்கான பரிபூரண பலனை அருளுவார்.

இந்த QR codeஐ ஸ்கேன் செய்து இயேசு அழைக்கிறார் பத்திரிகை ஊழியத்தை தாங்கலாம் அல்லது அச்சுப் பிரதிக்கான சந்தா செலுத்தலாம். பத்திரிகையின் மின்பிரதியை (e-magazine) இலவசமாக வாசிப்பதற்கான இணைப்பு: www.jesuscalls.org/magazine

SCAN TO DONATE

SEESHA
LET'S GIVE LIFE

நனவாகும் கனவுகள்

2026 சீஷாவின் ஸ்கூல் கிட்கள் வழங்குதல் தொடக்கம்

நலிவுற்ற பின்னணியைச் சேர்ந்த 20,000 சிறுபிள்ளைகளுக்கு ஸ்கூல் கிட் வழங்கும் பணி 2026 ஜூன் 13ம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. தொடக்க நிகழ்வில் 700 சிறுபிள்ளைகளுக்கு ஸ்கூல் கிட் வழங்கப்பட்டது; ஸ்கூல் கிட், அவர்கள் வகுப்புகளுக்கு நம்பிக்கையுடன் செல்ல உதவும்.

சீஷாவின் ஸ்தாபகரும், நிர்வாக அறங்காவலருமான Dr. பால் தினகரன் இந்த விநியோக நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். ஒவ்வொரு சிறுபிள்ளையும் சிரமத்தை மேற்கொண்டு படிக்க முடியும் என்பதை நினைவூட்டினார். அறங்காவலர் வழக்கறிஞர் ஈஸ்வரதாஸ் மற்றும் தலைமை செயல் அலுவலர் Ms. ஸ்வீட்டி யூனிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஸ்கூல் கிட் பள்ளிப் பை ஒன்றில் ஒரு மதிய உணவு பாத்திரம், தண்ணீர் பாட்டில், நோட்டுகள், எழுதுபொருட்கள் உள்ளிட்டவை இருக்கும். எளிமையான சாதாரண பொருட்கள் என்றாலும், அந்தப் பிள்ளைக்கு கௌரவத்தையும் சுயமதிப்பையும் அளிக்கும்.

அனைத்து கற்றல் மையங்களிலும் சேர்த்து 3 சாதனையாளர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. திறன் பயிற்சியை முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்தப் பணியில் இணைந்திடுங்கள்; நலிவுற்ற சிறுபிள்ளைகளுக்கு கல்வியை சாத்தியமாக்கிடுங்கள்.

நம்பிக்கை மிக்க எதிர்காலத்திற்கு நவீன வகுப்பறைகள்

வகுப்பறைகளை டிஜிட்டல்மயமாக்குவது இளம் பிள்ளைகள் கற்கும் முறையினை மாற்றுகிறது. நகர்ப்புற மற்றும் கிராமப்புற குடிசைப்பகுதிகள், மலைவாழ் சமுதாயத்தின் நடுவில் சீஷா, புரொஜக்டர்கள், tabletகள், டிஜிட்டல் content கொண்ட நவீன (smart) வகுப்பறைகளை அறிமுகம் செய்கிறது. பாரம்பரிய முறையிலான கல்வியை தாண்டி செயலிகள், presentations, practice sheets மற்றும் பாடங்களை காட்சி முறையில் மதிப்பீடு செய்வது ஆகியவை வகுப்பறையில் பயன்படுத்தப்படுகிறது.

எதிர்கால வேலைக்கு மாணவ மாணவியரை ஆயத்தப்படுத்தும்வண்ணம், ராஞ்சி, சென்னை, கடலூர் மற்றும் வியாராவில் MS office முதல் Canva மற்றும் அடிப்படை செய்யறிவு வரை அத்தியாவசிய திறன்கள் மாணவ மாணவியருக்கு கற்றுக்கொடுக்கப்படுகிறது.

ஒரு சாதனத்தை வழங்குங்கள்; எதிர்காலத்தை பிரகாசமாக்குங்கள்

*** டிஜிட்டல் அறிவு பயிற்சிக்கான டெஸ்க்டாப் கணினி - ரூ.35,000/- ஒன்று**

*** மாணவருக்கான** interactive **கற்றலுக்கான** Tablet **- ரூ.18,000/- ஒன்று**

டிஜிட்டல் அறிவு பெற ஒவ்வொரு சிறுபிள்ளைக்கும் இந்தக் கருவிகள் தேவை.

UPI ID : 9384015155@okbizaxis

044 66660000
+91 9300 600 600
www.seesha.org
info@seesha.org
SEESHA house No.37, Gandhi Road, Tambaram (West), Chennai - 600045

DONATE TO SEESHA

You can also donate through: https://seesha.app

* When you Donate send the Details to +91 9300 600 600

சீஷா முதியோர் இல்லம்

சீஷாவின் முதியோர் பராமரிப்பு இல்லம், கோயம்புத்தூர், காருண்யா நகரில் சிறுவாணி அருவி மலையடிவாரத்தில் அமைந்துள்ளது. முதியோருக்கு உதவி, சத்துள்ள உணவு, குறைந்த கட்டணத்தில் முதுமைக்கான பராமரிப்பு அளிக்கப்படுகிறது. ஒரு முதியவரும் மறக்கப்பட்டுவிட்டதாக உணராமல் இருப்பதற்கு உதவுங்கள். கீழ்க்காணும் விதங்களில் நீங்கள் ஆதரிக்கலாம்.

* ஒரு முதியவருக்கான முழு பராமரிப்பு ரூ.15,000/- மாதத்திற்கு * 4 முதியோருக்கான பராமரிப்பு ரூ.60,000/- மாதத்திற்கு

ஒரு முதியவரை ஆதரிக்க நீங்கள் வாக்குறுதி அளித்தால், Hold their hands, heal their hearts என்ற வாசகம் பொறிக்கப்பட்ட சீஷா கைப்பட்டை (wristband) ஒன்று அனுப்பி வைக்கப்படும். மேலும் அறிந்துகொள்வதற்கு +91-9500 127275 என்ற எண்ணை தொடர்புகொள்ளுங்கள்.

REGISTERED NEWSPAPER RNI No.TNTAM/2003/10418

ஹிந்தி
மற்றும்
ஆங்கிலத்தில்
நேரடி
ஒளிபரப்பு

இந்த QR Code
வாயிலாக உங்கள் ஜெப
விண்ணப்பங்களை
அனுப்புங்கள்

BRAND NEW

ONLINE PRAYER FESTIVAL

புத்தம் புது இணையவழி பிரார்த்தனை திருவிழா

இயேசு அழைக்கிறார் யூடியூப் சேனலில் காணுங்கள்

YouTube JESUS CALLS

Dr. பால் தினகரன் குடும்பத்தினர்
உங்கள் தேவைகளுக்காக ஜெபிக்கும்போது
ஐக்கியப்படுவோருடன் இணைந்துகொள்ளுங்கள்.

2026
ஆகஸ்ட்
15

பகல் 11
மணிக்கு
ஆரம்பமாகும்

ஹிந்தி
மற்றும்
ஆங்கிலத்தில்

இந்த நாளை குறித்து வைத்துக்கொள்ளுங்கள்
உங்கள் தொடர்பில் இருப்பவர்கள் அனைவருக்கும்
இதை அனுப்புங்கள்... ஆசீர்வாதமாக வினியோகியுங்கள்.

www.youtube.com/jesuscalls

Printed by Bharathi Raj Kumar Printed at Rasi Graphics Private Limited, 40, Peters Road, Royapettah, Chennai, Tamil Nadu - 600014. Published by Ernest G L B Published at Jesus Calls, 16, Dr. D.G.S. Dhinakaran Salai, R.A. Puram, Chennai, Tamil Nadu - 600028 on behalf of Jesus Calls. Editor Ernest GLB